# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 06 அதிர்வு 65 கார்த்திகை 2022 editor@ethiroli.com தொ.பே:1800 960 162

















ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au www.srikumaran.com.au

# விக்டோரியாவில் வெல்லப்போவது யார்?



ஆஸ்திரேலியாவில் பொதுத் தேர்தல் என்ற ஜனநாயகத் திருவிழா நடைபெற்று - முடிவுற்று ஐந்து மாதங்களே கடந்துள்ள நிலையில், விக்டோரிய வாழ் மக்கள் மற்றுமொரு ஜனநாயகத் திருவிழாவை எதிர்கொள்ளத் தயாராகிவருகின்றனர். இந்தத்தேர்தலில் வெற்றி மகுடம் சூடப் போவது யார்? என்ற வினாதான், விக்ரோரியாவில் பட்டிதொட்டியெங்கும் தற்போது எழுப்பப்பட்டுவருகின்றது.

மூன்றாவது முறையாகவும் முதல்வராக (பிரிமீயராக) டனீயல் அன்ரூஸ் தெரிவு செய்யப்படுவாரா அல்லது அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் வகையில் லிபரல் கூட்டணி அரியணையேறுமா அல்லது TEAL என்ற சுயேச்சையர்கள் வெற்றிநடைபோடுவார்களா என்பது குறித்து பலரும், பலகோணங்களில் கருத்துகளையும், கணிப்புகளையும் வெளியிட்டுவருகின்றனர். எனினும், எதிர்வரும் 26 ஆம் திகதியே உண்மையான - உறுதியான பதில் கிடைக்கப்பெறும்.

கடைசியாக 2018 நவம்பர் 14ஆம் திகதிக்கு முன்னர் நடைபெற்ற விக்ரோரிய மாநிலத் தேர்தலில் - 88 ஆசனங்களுக்கான போட்டியில் 55 ஆசனங்களை வென்று ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டது லேபர் கட்சி. லிபரல் கட்சி தலைமையிலான தேசியக் கூட்டணி 27 ஆசனங்களைக் கைப்பற்றியது. கிறின் கட்சி மற்றும் சுயேச்சைகள் தலா மூன்று ஆசனங்கள் வீதம் பெற்றன.

இந்நிலையில் லேபர் கட்சியின் ஆட்சிக்கு முடிவுகட்டி, ஆட்சிபீடம் ஏறவேண்டுமானால் கடந்த முறை பெற்ற ஆசனங்களை விடவும் இம்முறை கூடுதலாக 18 ஆசனங்களை லிபரல் கூட்டணி பெற வேண்டும். இதற்காக அந்தக்கட்சி தீயாகச் செயற்பட்டுவருகின்றது. மறுபுறத்தில் ஆளுங் கட்சியும் தன்னுடைய இருப்பைக்காக்க இறுதி அஸ்திரங்களையெல்லாம் ஏவத்தான் போகின்றது. ஆக - இம்முறை நடைபெறும் தேர்தல் கடும் சவாலான பலப்பரீட்சையாகவே அமையப்போகின்றது.

கொரோனாப் பெருந்தொற்றால் உலகிலேயே அதிக நாட்கள் முடங்கியிருந்த மாநிலம்தான் விக்டோரியா. கொரோனாக் கட்டுப்பாட்டுத் தளர்வுகளின் பின்னர் அந்தமாநில மக்கள் முகங்கொடுக்கும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

நீண்டகால முடக்கம், வைத்தியசாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் இடம்பெற்ற ‘வெட்டு’, ஊழல் குற்றச்சாட்டுகளுக்குள் சிக்கி அமைச்சர்கள் பதவி இழப்பு உள்ளிட்ட விடயங்கள் பிரிமீயர் டனீயல் அன்ரூஸ் மீது, மக்களின் அதிருப்தி அலையை உருவாக்கியுள்ளது. கிரிக்கெட்டில் ‘ப்ரி ஹிட்’ போல, இவற்றை வைத்து விளாசுவதற்கு எதிரணிகளுக்கும் சாதகமான சூழல் இல்லை என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேவேளை, கடந்த ஆஸ்திரேலிய நாடாளுமன்றத் தேர்தலில் லிபரல் கூட்டணியின் வாக்கு வங்கி, TEAL என்ற சுயேச்சை அணிக்கு கைமாறியிருப்பது எதிர்கட்சியின் வாக்கு வங்கியில் சரிவு ஏற்பட்டுள்ளது என்பதை பிரதிபலிக்கின்றது.

இதற்கிடையில் விக்ரோரிய மாநிலத்தில் இடம்பெற்ற தொகுதி மீள் பங்கீடுகளும் லேபர் கட்சிக்கே சாதமாக உள்ளன. இத்தகைய மீள் பங்கீட்டின் அடிப்படையில் லிபரல் தனது 4-5 ஆசனங்களை இழக்கும் என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், TEAL என்ற சுயேச்சையினர் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்துக்கான தேர்தலி கணிசமானளவு ஆசனங்களை தட்டிச்சென்றனர். எனினும், விக்ரோரிய மாநிலத்துக்கான தேர்தலில் அவர்களின் வெற்றி வாய்ப்பு எவ்வாறு உள்ளது என்பதை முன்கூட்டியே உறுதியாகக் கூறிவிட முடியாது.

ஏனெனில் மாநிலப் பிரச்சினைகள், நாட்டுப்பிரச்சினைகளுடன் ஒப்பிடும் போது வேறுபட்டவை. எனவே, அவர்களின் வெற்றி என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. மருத்துவம், அம்புலன்ஸ் மற்றும் தீயணைப்பு போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தற்காக 12 பில்லியன் டொலர் மேம்படுத்தல் திட்டத்துக்காக வழங்கப்படும் என லேபர் கட்சி அறிவித்துள்ளது.

ஆனாலும் மீண்டும் லேபர் ஆட்சிக்கு வந்தால், இவ்வாறான குளறுபடி இடம்பெறும் என குற்றம் சாட்டும் லிபரல் கட்சி, அதற்கான மாற்றுத் திட்டமாக லேபர் கட்சியால் Suburban Rail Loop என்ற திட்டத்திற்றுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி அதனை மருத்துவத்துறைக்கு ஒதுக்குவோம் என்று கூறியுள்ளது. அதுமட்டுமின்றி இனியொருபோதும் நீண்ட முடக்கம் நடைமுறைக்கு வராது என்று மாநில லிபரல் கட்சித்தலைவர் Matthew Guy உறுதியளித்துள்ளார்.

ஆனால் முடக்கம் என்பது கட்சியின் முடிவு சார்ந்தது அல்ல: மாநில சுகாதாரத் துறையின் உயர் அதிகாரியின் முடிவின் படியே முடக்கத்துக்கு மாநிலம் உள்ளாகும். அதனைவிடுத்து எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதைப்போல முடிவெடுக்க முடியாது என்று பதிலடி கொடுத்துள்ளார் பிரிமீயர் டனீயல் அன்ரூஸ்.

இதேவேளை கீழ் சபையில் ஆட்சியை முட்டிமோதி லேபர் கட்சி தக்கவைத்தாலும் சட்டங்களை உருவாக்குவதற்கான மேல் சபையில் லேபர்கட்சி இடறுப்படவேண்டிய நிலையே உருவாகும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இப்படியான ஒரு பரபரப்பான சூழலில், முடிவுகள் தொடர்பாக முன்கூட்டியே கணிக்கமுடியாத நிலையில், விக்டோரியா மாநிலத்தின் தலைவிதி எதிர்வரும் 26 ஆம் திகதி நிர்ணயிக்கப்படவுள்ளது.

# பந்தயக் குதிரைகளின் வெந்துயர்!

## (மெல்பேர்ன் குதிரைப் பந்தயம்-2022- ஒரு பார்வை)



சியாமளா யோகேஸ்வரன்

இந்தியாவில் ஜல்லிக்கட்டு எப்படியோ, அதைப் போலவே ஆஸ்திரேலியாவில் மெல்பேர்ன் குதிரைப் பந்தயம் மிகப் பிரபல்யமானது. கார்த்திகை மாதத்தின் முதலாவது செவ்வாய்க்கிழமை மதிய நேரத்தில் நடைபெறும் இந்தப் பந்தயத்தால் முழுநாடுமே ஸ்தம்பித்துப் போய் விடும். மீளப்பெற முடியாத குதிரை வாலில் கட்டிய பணமாய், பலர் தம் சொந்தப்பணத்தைத் தொலைத்தாலும், பல மில்லியன் கணக்கில் பணம் புரளும் இந்தப் பந்தயத்தால் நாட்டின் பொருளாதாரம் மேம்படுகின்றது. பந்தயப்பணத்தின் பெருந்தொகைப் பெறுமதிதான் இந்தக் குதிரைப்பந்தயத்தை இன்னமும் உயிர்ப்புடன் வைத்திருக்கின்றது. கிட்டத்தட்ட ஐம்பது நொடிகள் மட்டுமே என்றாலும், எல்லோரையும் வாயைத் திறந்து பார்த்துக் கொண்டிருக்க வைக்கும் இந்த ஓட்டப் பந்தயத்தின் பின்னணியை அறியும் ஆவல் எல்லோருக்குள்ளும் இருக்கும்.

1600 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பந்தயம் நினைப்பதைப் போன்று அத்தனை எளிமையானதாக நடத்தி முடிக்கக் கூடியதொன்றில்லை. தரோப்ரெட் (thoroughbred) என்ற இனத்தைச் சேர்ந்த குதிரைகளே இந்த ஓட்டப்பந்தயத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அதிதீவிரப் பயிற்சிகளுக்கு உட்பட்டு இரண்டு வயது முதல் மனிதர்களின் பந்தயவெறிக்குள் அகப்பட்டுத் தலைதெறிக்க ஓடும் குதிரைகள் அதிகபட்சம் 70 மில்லியன் டொலர் வரைக்கும் விலைபோகும் அளவுக்குப் பெறுமதி வாய்ந்தவை.

நாளாந்தவலிகள், கட்டுப்பாடான நெறிமுறைகள், உண்மையான அர்ப்பணிப்புடன் கூடிய பயிற்சிகள் என்பவை குதிரை மற்றும் பயிற்றுநர் என்று இருவருக்குமே பொதுவானவை. குதிரைக்கு மட்டுமல்லாமல் ஓட்டுபவருக்குமே நிறைய விதிமுறைகள் இருக்கின்றன. குதிரையோட்டி ஐந்தடி ஆறங்குல உயரத்துக்கு உட்பட்டவராயும், 120 இறாத்தல் நிறைக்குட்பட்டவராயும் இருக்க வேண்டியது கட்டாயமாகின்றது.

1861ஆம் ஆண்டு தொடக்கம் 3200 மீற்றருக்கான குதிரைகளின் ஓட்டப் பந்தயம் மெல்பேர்னின் பிளெமிங்டன் பந்தயத்திடலில் நடைபெற்று வருகின்றது. இந்த வருடம் ‘மார்க் ஷாக்ரா’ என்ற குதிரை ஓட்டியின் வழிகாட்டலுடன் லண்டன் குதிரையான ‘கோல் டச்சிங்’ 162 ஆவது வெற்றிக் கோப்பையைத் தட்டிச் சென்றுள்ளது. விதவிதமான தொப்பிகளுடன் அழகான ஆடையணிந்த மாந்தர்களும், நேரிலும், தொலைக்காட்சியிலும் இதயம் துடிக்கப் பொதுமக்களும் பார்த்திருக்கும் போது குதிரை ஓட்டியின் உணர்வுகளைப் பற்றிச் சொல்லவா வேண்டும்?

கோவிட் பார்ட்டி ஒன்றில் கலந்து கொண்டமைக்காக சென்ற ஆண்டுப் பந்தயத்தில் கலந்து கொள்ளத் தடைவிதிக்கப்பட்டிருந்தவர் சற்றும் தளர்ந்து விடாமல், சாதனை நிமிடத்தை இம்முறை தனதாக்கிக் கொண்டுள்ளார். கடைசிப் பத்து நொடிக்குள் முன்னணி நிலைக்கு வந்து, பின்னாலிருந்து எட்டிப் பிடிக்கத் துடித்த குதிரையுடனான ஓட்டத்தில் பெற்ற வெற்றி சம்பந்தப்பட்டவர்களுக்கும், பந்தயத்தில் வென்றவர்களுக்கும் நிச்சயம் சுவையானதாயிருக்கும்.

ஆனால் மனிதர்களுடன் நட்பாக உறவாடக் கூடியதான ஒரு கம்பீரமான விலங்கைக் கசையடி கொடுத்துப் பயிற்றுவித்து, தொண்டைக்குள் செருகி விடாமல் நாக்கைக் கட்டி வைத்து எமது பந்தயத்துக்காக ஓட விட்டு அதை ரசித்துக் கொண்டிருக்கின்றோம் என்பது வேதனைக்குரியதொன்றே. 2020 ஆம் ஆண்டு பந்தயத்தில் ஓடும் போது ‘அந்தோனி வான் டிக்’ என்ற குதிரை காலை உடைத்துக் கொண்டபோது, அதனால் இனிமேல் எந்தப் பலனுமில்லை என்று கருதி அதைச் சுட்டுக் கொன்ற சம்பவம் நிறைய எதிர்ப்புக்களைச் சம்பாதித்தது. இந்த விடயம் பொதுவெளிக்கு வந்ததனால், அதேபோன்ற நிகழ்வு மீண்டும் நடைபெறாமல் இருக்க 44 சட்டவிதிமுறைகளையும் இயற்ற வைத்தது.

திரைக்கு வராமலேயே, ஆயிரத்துக்கு மேற்பட்ட குதிரைகள் மென்காப்பிட்ட கசையால் இன்றும் அடித்துப் பழக்கப்படுகின்றன. ஓட்டத்துக்குத் தகுதியற்ற குதிரைகள் தயவு தாட்சணியமின்றி கொலைக் களத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அவற்றின் இறைச்சி ஏற்றுமதி செய்யப்படும் அல்லது மனிதனுக்கோ, நாய்க்கோ உணவாகக் கொடுக்கப்படும். அந்தளவுக்கு இந்தப் பந்தயப்பணம் மனிதத்தன்மையைக் கொன்று கூறு போட்டுள்ளது. அளவுக்கு மிஞ்சிய ஓட்டப்பயிற்சியின் விளைவால் காற்றுப்பையிலும் நுரையீரலிலும் இரத்தம் கசிகையில் ஏற்படும் வேதனையையோ, நாக்கைக் கட்டுவதால் வீக்கமும் வலியும் தரும் துன்பத்தையோ ஆதாரமாக வைத்து மனிதர்கள் மீது இந்த வாயில்லா ஜீவனால் வழக்கா போட்டு விட முடியும்?

மிருகவதை எதிர்ப்பாளர்கள் பந்தயத்திடல் பாதையில் எண்ணெய்க்கழிவுகளைக் கொட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டும் பயனின்றி 2022 ஆம் ஆண்டுக்கான பந்தயம் நடைபெற்று முடிந்து விட்டது. அடுத்த வருடத்துக்கான ஓடுகளத்துக்கு தம் மூச்சையும் உயிரையும் பணயம் வைத்து எங்கேயோ பல குதிரைகள் இப்போதும் தயாராகிக் கொண்டிருக்கக் கூடும். நாமும் எந்தக் குதிரையின் வாலில் பணத்தைக் கட்டினால் வெற்றி நிச்சயம் என்று அறிவதற்கான தரவுகளையும் புள்ளி விபரங்களையும் தேடத் தொடங்கி விடலாம்.


ISODIA TAX
ACCOUNTING AND TAX
QUALIFIED TAX AGENTS
TAX PRACTITIONERS BOARD REGISTERED
CHARTERED ACCOUNTANTS
வரி கணக்கை
தாக்கல் செய்ய
$99
மட்டுமே
எங்கள் சேவைகள்
வருமான வரி தாக்கல்
வணிக வரி (BAS) தாக்கல்
வணிக எண்ணை (ABN) அமைத்தல்
சுயமாக நிர்வகிக்கப்படும்
வருங்கால கருணைத்தொகை உதவி
(Setting up Self Managed Super Funds)
மேலும் விவரங்களுக்கு அழைக்கவும் !
03 8772 2557 | 0421 279 530 (DAN)
isodia.tax@gmail.com
THE HUB ARCADE, SUITE 4 SHOP 7 / 131 – 147 Walker St, Dandenong VIC 3175


PRAKAHS
GOLD BUYERS
தங்கம் ஈடு
வைக்கும் நிலையம்
உங்கள் அவசரப்பணத்தேவைக்கு உடனடித் தீர்வு!
வட்டி விகிதம் 3%
தங்கம் வாங்கும் இடம்
டனிஸ்டன் 0421 279 530
127 Walker St, Dandenong, VIC-3175.
prakahsgold@gmail.com
www.prakahsgold.com
/PrakahsGold
MON- SAT 10 AM - 5:30 PM
CLOSED SUNDAYS AND PUBLIC HOLIDAYS

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:06 அதிர்வு: 65 கார்த்திகை 2022 தொ.பே:1800 960 162

## குரல் கொடுக்க ஏன் தயக்கம்?

தமிழகத்தின் கோவையில் நடந்த கார் வெடிப்பின் பரபரப்பில் இருந்து இன்னமும் இந்தியா மீளவில்லை. கோவையின் உக்கடம் அருகே ஒக்ரோபர் 23ஆம் திகதி இந்தக் கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவம் நடைபெற்றது. அதில் காரில் பயணித்த ஜமேஷா முபீன் என்பவர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி இறந்தார்.அதன் பின்னர் இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில் முகமது தல்கா, முகமது அசாருதீன், முகமது ரியாஸ், பிரோஸ் இஸ்மாயில், நவாஸ் இஸ்மாயில் ஆகிய நான்கு முஸ்லிம்கள் இந்தச் சம்பவத்துடன் தொடர்புள்ளவர்கள் என்கிற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.இந்த வழக்கை தேசிய புலனாய்வு அமைப்பான என்.ஐ.ஏ விசாரிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் பரிந்துரைத்ததையடுத்து,என்.ஐ.ஏவுக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலையில்தான், இன்னொரு அதிர்ச்சித்தகவல் வெளியாகியுள்ளது. அதாவது 2019 இல் இலங்கையில் தேவாலயங்கள் மீது நிகழ்த்தப்பட்ட ‘ஈஸ்டர் தாக்குதலோடு’ தொடர்புடைய ஒருவரை, கோவை கார்வெடிப்பு சம்பவத்தில் சந்தேகநபர்களாகக் கைது செய்யப்பட்ட ரிசித் அலி, முகமது அசாருதீன் ஆகியோர் சந்தித்திருக்கிறார்கள் என்கிற தகவலே அது. ஆனால் அதில் எந்தளவுதூரம் உண்மையுண்டு என்பது பா.ஜ.க.வுக்குத்தான் வெளிச்சம்.

ஏனெனில் கோவைக் கார் வெடிப்பை அரசியலாக்க பா.ஜ.க. முயன்று வருகிறது. கடந்த இருபது ஆண்டுகளாகவே இந்தியாவில் எங்கு குண்டு வெடிப்பு நடைபெற்றாலும் அதனை உடனடியாக இஸ்லாமியர்களுடன் தொடர்புபடுத்தி வெறுப்பு பிரசாரத்தை மேற்கொள்வது, ஆதாரமற்ற தகவல்களை பரப்புவது என்பது பா.ஜ.க. மற்றும் சங்க பரிவார அமைப்புகளின் வாடிக்கையாக உள்ளது. முறையான விசாரணைகள் முடியும் முன்னரே, இவர்கள் இட்டுக்கட்டிய ஊடகச் செய்திகளைக் கசியவிட்டு, அதன் வழியே பாமர மக்களின் மனங்களில் வெறுப்பை விதைப்பதுவும் ஒரு நடைமுறையாக மாறியிருக்கிறது.

போர் நடைபெற்ற காலத்தில், இலங்கையில் எங்கேனும் குண்டு வெடிப்பு அல்லது தாக்குதல் சம்பவங்கள் நிகழ்ந்தால் முதல் வேலையாக, தமிழர்களுக்கு எதிரான வெறுப்பு பிரசாரத்தை ஊடகங்கள் மூலம் முன்னெடுப்பதும், பயங்கரவாதச் சட்டத்தின் துணையோடு இளைஞர், யுவதிகளைக் கேட்டுக் கேள்வியின்றிக் கைது செய்து சிறையில் அடைப்பதும் அடிக்கடி நடக்கும் ஒன்றாக மாறியிருந்தது. அதுபோலவே ஈஸ்டர் தாக்குதலின் போது, முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்புப் பிரசாரங்களும், கைதுகளும் நடந்தேறியிருந்தன. அதேபாணியில் தான் இப்போது கோவைக் கார் வெடிப்புக்கும் முஸ்லிம்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு, அவர்களுக்கு எதிரான விஷக் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற சிறுபான்மையினரை கருத்துகள், கைதுகள் மூலம் நசுக்கும் விவகாரம் தனியே இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மட்டும் நடக்கவில்லை. உலகம் முழுவதும் பல நாடுகளிலும் உள்ள பேரினவாதிகள், அங்குள்ள சிறுபான்மையினர் மீதே தங்கள் வக்கிரங்களை தீர்த்துக் கொள்கிறார்கள். சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிப்பதையும், தொடர்ச்சியாக அவர்கள் மீது விஷமத்தனமான கருதியல்களை உருவாக்கி பரப்புவதையும், அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக உணரவைப்பதையும் ஒரு பொழுதுபோக்காகவே ஆக்கிக் கொண்டுள்ளார்கள் அந்தந்த நாடுகளில் உள்ள பெரும்பான்மையினத்தவர்கள்.

பெரியார், அம்பேத்கர், சே குவாரா, மண்டேலா போன்றோரை சமூக வலைத்தளங்களில் மட்டுமே கொண்டாடிவிட்டு, உண்மையில் ஒரு சமூகம் பேரினவாதிகளால் ஒடுக்கப்படும்போது, அதைக் கண்டும் காணாமல் இருந்து ‘மிக்சர்’ தின்றுக் கொண்டு அப்படியே வேடிக்கைப் பார்க்கும் புலம் பெயர்ந்த சமூகமா நாம்? இப்போது எங்கே போயிற்று நம் ‘அறச்சீற்றம்’?

ஒரு விபத்து போல் அறியப்படும் கோவைக் கார் வெடிப்புச் சம்பவத்தை வைத்து ஒட்டுமொத்த சிறுமான்மையினரையே ஒடுக்கி அடக்கி அரசியல் செய்பவர்களை எதிர்த்து குறைந்த பட்சம் ஒரு அமைதி ஊர்வலமாவது போகக் கூடாதா நாம்? புலம் பெயர்ந்து வாழும் நாமும் இங்கு ஒரு சிறுபான்மையினர் என்பதை மறந்துவிட்டோமா? அங்கு இந்தியாவில் இருந்துக் கொண்டு ஏதாவது எதிர்ப்பு தெரிவித்தால் பேரினவாதிகளால் ஆபத்து நேரிடலாம் என பயப்படுவதில் ஒரு நியாயம் இருக்கிறது என வைத்துக் கொண்டாலும், இங்கு இருந்துக் கொண்டு அமைதியான முறையில் எதிர்ப்பு தெரிவிப்பதற்கு நமக்கு என்ன பயம்? எது நம்மைத் தடுக்கிறது?

‘முதலில் அவர்கள் சமதர்மவாதிகளை நோக்கி வந்தார்கள்–நான் அதைக் கண்டுகொள்ளவில்லை ஏனென்றால் நான் ஒரு சமதர்மவாதியல்ல.

பிறகு அவர்கள் தொழில்சங்கவாதிகளை நோக்கி வந்தார்கள்–நான் அதைக் கண்டுகொள்ளவில்லை ஏனென்றால் நான் ஒரு தொழில் சங்கவாதியல்ல.

பிறகு அவர்கள் யூதர்களை நோக்கி வந்தார்கள்– அப்பொழுதும் நான் அதைக் கண்டுகொள்ளவில்லை ஏனென்றால் நான் ஒரு யூதனல்ல.

கடைசியில் அவர்கள் என்னையும் நோக்கி வந்தார்கள்– ஆனால் எனக்காக குரல் கொடுக்க யாருமே எஞ்சி இருக்கவில்லை!’

ஆமாம் அவர்கள் நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்கள், நெருங்கிவிட்டார்கள்...!





# பொன்னியின் செல்வனும் கூட்டமைப்புச் சம்பந்தரும்!

● சுழியன்

பொன்னியின் செல்வன்’ நாவலை வாசித்தவர்களுக்கு அல்லது திரைப்படமாக வெளிவந்துள்ள பகுதி ஒன்றை பார்வையிட்டவர்களுக்கு சுந்தர சோழரின் நிலை நன்கு புரிந்திருக்கும். மருத்துவம், பாதுகாப்பு என்ற போர்வையில் அவர் மாளிகையில் சிறைவைக்கப்பட்டிருந்தார். சோழ வம்சத்தின் உண்மையான பாதுகாவலர்கள் என நம்பப்பட்ட பழுவேட்டையர்கள்கூட சிற்சில விடயங்களில் அரசருக்கு விசுவாசமாகச் செயற்படவில்லை.

அட, பொன்னியின் செல்வன் படமாகவும் வந்துவிட்டது, அது பற்றி பல தகவல்களும் ஏற்கனவே வெளிவந்துவிட்டன, தற்போது எதற்காக மீண்டும் அதைப்பற்றி எழுத வேண்டும் என்ற கேள்வி உங்களுக்குள் எழலாம். ஆம். பொன்னியின் செல்வனில் வருவதுபோல சிற்சில சம்பவங்களும் தமிழ்த் தேசிய அரசியலில் தற்போது அரங்கேறிவருகின்றன. மணிமகுடத்துக்கான உள்ளக மோதல்கள் முடியாட்சியிலும் சரி, குடியாட்சியிலும் சரி தொடரவே செய்கின்றன.

சுந்தர சோழர் நோய்வாய்ப்பட்டு முடங்கியிருந்ததுபோல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இப்போது நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார். வெளியில் தலைகாட்ட முடியாத நிலை. பாதுகாப்பான அறைக்குள்ளேயே அவரின் அந்திம காலம் ஓடிக்கொண்டிருக்கின்றது. சோழப் பேரரசில் நடக்கும் சில விடயங்கள் சுந்தர சோழருக்கு தெரியப்படுத்தப்படுவதில்லை. அதுபோல தமிழரசுக் கட்சிக்குள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நடக்கும் விடயங்கள் சம்பந்தருக்கு தற்போது அறிவிக்கப்படுவதில்லை. சிலவேளை பத்திரிகைகளைப் பார்த்தே சில விடயங்களை அவர் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை.

சுந்தர சோழர் மரணிக்கும் முன்னரே, அடுத்த அரசன் பற்றி சிற்றரசர்கள் ஆராயத் தொடங்கியிருந்தனர். இப்படிதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதாவது நடந்தால், அடுத்த தலைவர் யார் என்பது குறித்து தற்போதே தமிழரசுக்கட்சியும், கூட்டமைப்பும் கவனம் செலுத்தி வருகின்றன. ( சம்பந்தர் குணமடைய வேண்டும், நலமுடன் வாழ வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையும் கூட. அதற்காக அரசியல் வட்டாரங்களில் நடைபெறும் விடயங்களை குறிப்பிடாமல் இருக்க முடியாதே.)

இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியை கைப்பற்றுவதற்கு, தமிழரசுக்கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜா திரைமறைவில் திட்டம் தீட்டி வருகிறாரெனத் தெரியவருகின்றது. இதற்கான ஆதரவு அலையையும் அவர் திரட்ட ஆரம்பித்துள்ளார் என தமிழர் தாயகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் களமிறங்கி மண்கவ்விய மாவை சேனாதிராஜா, சுமந்திரன் தரப்புடன் முரண்பட்டு, செயற்பாட்டு அரசியலுக்கு சற்று விடை கொடுத்து - விலகி நின்று வேடிக்கை பார்த்தார். அவ்வப்போது யாழில் நடைபெறும் சில நிகழ்வுகளில் பங்கேற்றும் வந்தார். எனினும், தற்போது அவருக்கு திடீரென நாடாளுமன்ற உறுப்பினராகும் ஆசை வந்துள்ளது. இந்த இலக்கை - கனவை நிறைவேற்றிக்கொள்வதற்கு சுமந்திரன் தரப்புடன் சுமுக உறவை ஏற்படுத்திக்கொள்வதில் மாவையார் தீயாக செயற்பட்டுவருகின்றாராம்.

இதன் ஓர் அங்கமாக கடந்த காலங்களில் யாழ்ப்பாண எல்லைக்குள்ளேயே முடங்கியிருந்த மாவையார் , சுமந்திரனை குளிர்விப்பதற்காக, அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கையெழுத்து திரட்டும் நடவடிக்கையிலும் பங்கேற்று இன்ப அதிர்ச்சி கொடுத்தாராம். எரிபொருள் இல்லை, உடல்நிலை சரியில்லை என வவுனியாவுக்குகூட வரமறுக்கும் மாவையார், அம்பாந்தோட்டைவரை வந்தது தமிழரசுக் கட்சிக்காரர்களையே விழிபிதுங்க வைத்ததாம்.

அதுமட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசனின் எம்.பி. பதவியை தனக்கு வழங்கினால், இலங்கைத் தமிழரசுக்

> **சம்பந்தன் ஐயாவுக்கு, ஏதேனும் நடந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியை குறி வைத்தே, அதற்கான பிள்ளையார் சுழியாக எம்.பியாவதற்கு மாவை முயற்சிக்கின்றார்.**
>
> **ஏனெனில் சுமந்திரனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியை வழங்குவதற்கு செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் போர்க்கொடி தூக்குவார்கள், உள்ளகப் போராட்டம்கூட நடத்துவார்கள். ஆனால் மாவை வந்தால் அவர்களும் ஆமாம் சாமி போடக்கூடும். தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் பதவியைவிட, தமிழரசுக் கட்சியின் தலைமைப்பதவியே சுமந்திரனுக்கு முக்கியம். ஆக – மாவையை கூட்டமைப்பின் தலைவராக்குவதில் சுமந்திரனுக்கு ‘டபிள் ஓகே’யாம்.**

கட்சியின் தலைவர் பதவியை, அடுத்த மாநாட்டின்போது சுமந்திரனுக்கு வழங்குவதற்கும் மாவை பச்சைக்கொடி காட்டியுள்ளாராம். மாகாண அமைச்சுப் பதவியை காட்டி, கலையரசனுக்கும் சமரசத் தூது அனுப்பட்டுள்ளது.

சம்பந்தன் ஐயாவுக்கு, ஏதேனும் நடந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியை குறிவைத்தே, அதற்கான பிள்ளையார் சுழியாக எம்.பியாவதற்கு மாவை முயற்சிக்கின்றார்.

ஏனெனில் சுமந்திரனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப்பதவியை வழங்குவதற்கு செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் போர்க்கொடி தூக்குவார்கள், உள்ளகப் போராட்டம்கூட நடத்துவார்கள். ஆனால் மாவை வந்தால் அவர்களும் ஆமாம் சாமி போடக்கூடும். தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் பதவியைவிட, தமிழரசுக்கட்சியின் தலைமைப்பதவியே சுமந்திரனுக்கு முக்கியம். ஆக - மாவையை கூட்டமைப்பின் தலைவராக்குவதில் சுமந்திரனுக்கு ‘டபிள் ஓகே’யாம்.

தலைவராகுவதற்கு அனைத்து தரப்புகளின் ஆதரவை திரட்டும் பணியில் மாவை ஈடுபட்டுவருகின்றார். இதற்கிடையில் அடுத்த வருடம் தமிழரசுக்கட்சியின் மாநாடு நடைபெறும். அந்தக் காலப்பகுதியில் ‘பொன்னியின் செல்வன்-2’ ஆம் பாகமும் வெளிவந்திருக்கும். அப்போது இங்கு நடைபெறும் அரசியல் சூழ்ச்சி பற்றியும் பகுதி -2 ஐ எழுதக்கூடியதாக இருக்கும். ■


# பூர்வகுடிகளுக்கான முதல் குரல்: எடி மாபோ



கார்த்திக்வேலு

ஆஸ்திரேலியக் கண்டத்தை கப்டன் குக் முதன் முறையாக அடையாளம் கண்டபோது அதை ‘Terra nullius’ என்றே குறிப்பிடுகிறார். அதாவது ‘யாருமற்ற நிலம்’ என்ற அர்த்தத்தில். இப்படி அறிவித்துக்கொண்டதால் இந்த நிலப்பரப்பை பிரிட்டிஷ் முடியரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதில் சிக்கல் ஏதும் இல்லாமல் போனது. இது யாருமற்ற நிலம் என்றால் இதை யாரிடமிருந்தும் தாங்கள் பறித்துக்கொள்ளவில்லை என்பதும் உண்மையாகிவிடுகிறது இல்லையா?

இதை அடிப்படையாகக் கொண்டே ஆஸி அரசியல் சாசனமும், பிற சட்டங்களும் இயற்றப்படுகின்றன. கப்டன் குக் ஆஸியில் கால் பதிப்பதற்கு முன்னதாகவே ஆஸியின் நிலத்துக்குச் சொந்தக்காரர்களாக இருந்த பூர்வகுடிகள், இந்த புதிய அரசியல் அமைப்பில் எந்தவித அதிகாரமும் உரிமையும் அற்றவர்களாக ஒதுக்கப்படுகிறார்கள். இந்தப் பிரகடனத்தை எதிர்த்து ஒருவர் கேள்வி கேட்க கிட்டத்தட்ட



இருநூறு வருடம் காத்திருக்க வேண்டியிருந்தது . அந்தக் குரலை எழுப்பியவர்தான், எட்டி மாபோ. அதனால்தான் அவர் ஆஸி வரலாற்றில் குறிப்பாக பூர்வகுடியினரின் பார்வையில் ஒரு நாயகனாக எழுந்து நிற்கிறார் .

பூர்வகுடியினத்தவரான எடி மாபோ 1936 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் வடகோடியில் உள்ள டாரஸ் ஜலசந்தி தீவுகளில் பிறந்தவர். பூர்வகுடி வழக்கங்களிலும் நவீன வாழ்க்கை முறையிலும் நல்ல பரிச்சயம் உள்ளவர். நில உரிமை குறித்து 1981 இல் அவர் ஆற்றிய உரை ஒன்றில் ‘இந்த நிலம் என்றுமே யாருமற்ற நிலமாக இருந்ததில்லை, இங்கு 50,000 ஆண்டுகளுக்கு மேலாக தொடர் மனித குல இருப்பு இருந்து வந்திருக்கிறது. பூர்வகுடிகள் பல்வேறு இனக்குழுக்களாக, பல்வேறு மொழிகள் பேசுபவர்களாக (250 மொழிகள் ) ஆஸி நிலம் முழுதும் விரவி இருந்தார்கள்’ என்று விளக்கினார்.

பூர்வகுடிகளின் வாழ்க்கை எப்படி இந்த நிலத்துடன் பிணைக்கப்பட்டது, அவர்களின் நம்பிக்கையிலும் சடங்குகளிலும், வாழ்வாதாரமாகவும் எப்படி இந்த நிலம் இருந்தது என்பது குறித்து விரிவாக தனது விளக்கங்களையும் வாதங்களையும் எடி மாபோ முன்வைத்தார்.இப்படி 50,000 ஆண்டுகளுக்கு மேலாக பரம்பரை பரம்பரையாக பூர்வகுடி மக்கள் வாழ்ந்து மடிந்த நிலத்தை ‘யாருமற்ற நிலம்’ என்று கூறுவது அறமற்ற கூற்று என்றும் அது சட்ட ரீதியாகவும் பிழையானது என்ற கருத்தையும் எடி மாபோ முன்வைத்தார் .

யதேச்சையாக இந்த உரையை கேட்டுக்கொண்டிருந்த வழக்கறிஞரான கிரெக் மெக்கிண்டையர் என்பவர், மாபோவிடம் இதை ஒரு வழக்காக ஆஸ்திரேலிய அரசுக்கு எதிராக நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல உத்தேசிக்கிறீர்களா? என்று கேட்டார். எடி மாபோவும் ‘ஆம்’ என்று சொல்ல, அதுவே இன்று நாம் “மாபோ வழக்கு” என்று குறிப்பிடும் முக்கியமான வழக்குக்கு அடிகோலியது.

இந்த நிலம் யாருக்கு சொந்தமானது? என்று ஆஸி நீதிமன்றத்தில் மாபோ தொடுத்த வழக்கு பத்து வருடங்களுக்கு மேல் நடைபெற்றது. ஆயினும் இறுதியாக 1992 இல் வந்த தீர்ப்பு ஆஸி பூர்வகுடிகளுக்கு சாதகமாவே அமைந்தது. ஆஸ்திரேலிய நிலப்பரப்பை Terra Nullius (யாருமற்ற நிலம்) என்பது பிழையான நிலைப்பாடு என்றும், இந்த நிலத்தில் உண்மையான உரிமையாளர்கள் அபரிஜின்ஸ் மற்றும் டாரஸ் ஜலசந்தி தீவுகளில் வாழ்ந்து வந்த பூர்வகுடிகளே என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பின் நீட்சியாக பூர்வகுடி நில உரிமைச் சட்டத்தையும் (Native Title Act ) ஆஸி நாடாளுமன்றம் 1993 இல் நிறைவேற்றியது. இந்தச் சட்டம் ஆஸியின் பூர்வகுடியினருக்கு அவர்கள் வாழ்ந்து வந்த நிலத்தின் மீது குறிப்பிட்ட சில உரிமைகளைப் பெற வழிசெய்கிறது.

சட்டம் ஒருபக்கம் இயற்றப்பட்டாலும் அவரவர் நிலப்பகுதியின் மேல் பூர்வகுடியினர் உரிமைகோரல் என்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. இந்தச் சட்டம் இயற்றப்பாடு கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் கடக்கவுள்ள சூழலில் கடந்த 7,8 வருடங்களிலேயே பல உரிமை கோரல்களுக்கு முடிவு கிடைத்துள்ளது. இதுவரை மொத்தம் 571 உரிமை கோரல் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் 191 விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

இதில் ஒரு சிறு எண்ணிக்கையினரே நிலத்தைப் பயன்படுத்த (Land Use agreement ) ஆரம்பித்துள்ளனர். இந்தச் சட்டம் பூர்வகுடி உரிமை நிலத்தை ஒரு குழுவாக பயன்படுத்த அனுமதி அளிக்குமே தவிர அந்த நிலத்தை அவர்கள் விற்கவோ வாங்கவோ அனுமதி அளிக்காது. மேலும் அந்த நிலத்தின் மீது அந்தக் குழுவில் உள்ளவர்கள் யாரும் தனியுரிமை (freehold ) கொண்டாட இயலாது. அந்த நிலத்தில் ஒரு குழுவாக வாழவும், தங்கள் சடங்குகளில் ஈடுபடவும், வேட்டையாடவுமான உரிமையை இந்தச் சட்டம் உறுதி செய்கிறது.

நிலத்தின் மீதான உரிமையை நிலை நாட்டுவதில் முக்கியமான பங்காற்றிய மாபோவை மரியாதை செய்யும் வகையில் ஒவ்வொரு வருடமும் ஜூன் 3 ஆம் திகதி - அதாவது எடி மாபோவின் வழக்கு தீர்ப்பான நாள் - எடி மாபோ தினமாக க்கொண்டாடப்படுகிறது

எடி மாபோ போன்றவர்கள் முன்னெடுத்த மாற்றத்துக்கான முயற்சி இன்று ‘உலுரூ தீர்மானம்’, ‘பூர்வகுடிகளில் குரல்’ என்று அடுத்த அடுத்த கட்டத்தை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது.

மால்கம் டர்ன்புல் அரசால் 2015 இல் அமைக்கப்பட்ட குழு நாடெங்கிலும் உள்ள பூர்வகுடிகளுடனும் அவர்களின் பிரதிநிதிகளிடமும் இருந்தும் அவர்களில் குறைகள் மற்றும் கோரிக்கைகள் திரட்டும் பொருட்டு தொடர் கூட்டங்களையும் விவாதங்களையும் ஒழுங்கு செய்தது. இவைகளின் சாரமான கோரிக்கைகளை ஒரு பொது அறிக்கையாக 2017 இல் உலுரூ தீர்மானம் (Ulurau Statement) நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில் திரண்ட கோரிக்கையாக மூன்று விஷயங்கள் எழுந்து வந்தன. முதலாவதாக ஆஸ்திரேலிய நாடாளுமன்றில், அரசியல் முடிவுகள் எடுக்கும் இடத்தில் தங்களுக்கான பிரதிநிதித்துவமாக ஒரு ‘குரல்’ வேண்டும் என்ற கோரிக்கை.

ஆஸி மக்கள் தொகையில் 3-4 மூ இருந்தாகும் பூர்வகுடி மக்கள் நாடெங்கும் சிதறிப் பரவியிருப்பதால் அவர்கள் ஓர் ஒற்றை அரசியல் தரப்பாக திரண்டு நாடாளுமன்றத்தில் தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் பெறுவது என்பது இயலாத காரியம், எனவே அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாடாளுமன்றத்தில் நேரடியாக பிரதிநிதித்துவத்தை, அதிகாரப் பங்கீட்டை இது கோருகிறது.

அடுத்த இரண்டு கோரிக்கைகளாக புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், உண்மை அறியும் குழுவின் மூலம் வரலாறு சரியாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோருகின்றன. இந்த மாற்றங்கள் நிகழ வேண்டுமானால் அவை பொதுமக்களின் கருத்துக் கணிப்பின் மூலமே நிகழ முடியும். இதை நடைமுறைப்படுத்தவிருப்பதாக நடப்பு அரசு உறுதி அளித்திருந்தாலும் அதற்கான காலகட்டம் இன்னுமே குறிக்கப்படாதது ஏமாற்றமளிக்கிறது.

பல ஐரோப்பிய நாடுகளிலும் நியூசிலாந்திலும் இவ்வகை பூர்வகுடி அதிகாரப் பங்கேற்பு ஏற்கனவே பல்வேறு வடிவங்களில் ஆரம்பித்துவிட்டிருக்கிறது. எனவே இவ்வளவு வருடங்களாக இழுபறியில் இருந்த உலுரூ தீர்மானங்களை மேலும் காலம் தாழ்த்தாமல் நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த மாற்றங்கள் எல்லாம் வெறும் அரசியல் நகர்வுகளாக மட்டுமல்லாமல் ஆஸி சமூகத்தின் ஒட்டுமொத்த புரிதலும் ஏற்பும் கொண்ட ஒன்றாக மாறவேண்டும். இந்த மாற்றங்கள் ஆஸ்திரேலியர்கள் அனைவரையும் உள்ளடக்கி முன்செல்லும் ஒன்றாக அமைய வேண்டும். ■

LEGAL STUDIES TUITION

YEAR 11 AND YEAR 12

BY VICTORIAN SOLICITOR




FOR FURTHER DETAILS

PLEASE CONTACT:
0405982583
or
Email: nag418662@gmail.com



# Sai Shree Foods Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

கார்த்திகை 2022 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162


## மாவீரர் வார சிறப்பிதழ்



எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
கார்த்திகை 2022

# மலையகம் தந்த மாவீரம்!



ஆர்.சனத்

"நீர் இன்றி அமையாது உலகு
உங்கள் நினைவின்றி விடியாது பொழுது
கல்லறை முன் கைகள் தொழும்போது – நாங்கள்
தமிழர் என்று தலைநிமிர்ந்து கொள்ளும்"

ஆம். மண்டியிட்டு வாழ்வதைவிட, சண்டையிட்டு மடிவதே மேலானது என்பதை உலகுக்கு உணர்த்தியவன்தான் வீரத்தமிழன். அதுமட்டுமல்ல, இறுதிமூச்சு இருக்கும் வரை இலக்கை அடைய தன்மானத்துடன் தளராது போராடுபவன் என்ற பெருமையும் தமிழனுக்கே இருக்கின்றது.

இதை சொல்லளவில் மட்டும் உச்சரிக்காது, செயலிலும் செய்துகாட்டியவர்கள்தான் விடுதலைப்புலிகள். தம்மைக் காப்பதற்காக அவர்கள் ஆயுதம் ஏந்தவில்லை. தம் இனத்தைக் காக்கவே களமாடினார்கள். காவல் தெய்வங்களாக வலம் வந்தார்கள். அப்படிப்பட்ட மாவீரர்களை எம் உடலில் இறுதிமூச்சு இருக்கும்வரை எம்மால் மறந்திட முடியாது. மறந்திடவும் கூடாது.

விடுதலைப்புலிகள் என்ற அமைப்பு முப்படைகளுடனும் வீறுநடைபோடுவதற்கு ஒற்றுமையே பக்கபலமாக இருந்தது. அது சிதைவடையத் துவங்கிய பின்னர்தான் தமிழர்களின் ஆயுதப்போராட்டமும் மௌனிக்கத் தொடங்கியது.

தற்போதுகூட ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணராமல் தமிழர்கள் பல்வேறு கோணங்களில்பிரிந்துநிற்கின்றனர். பிரதேசவாதம் பேசுதல், குலபேதம் பார்த்தல், அரசியல் குத்துவெட்டுக்கள் என்ற அசிங்கமான சம்பவங்கள் அனைத்தும் எங்களின் கண்முன்னால் இடம்பெற்றுவருகின்றன. வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களையும், மலையகத் தமிழர்களையும் பிரித்தாளும் சூழ்ச்சி வகுக்கப்பட்டு மிகக்கச்சிதமாக இனவாத அரசினால் அரங்கேற்றப்பட்டுவருகிறது. இந்தப்பிடிக்குள் தமிழர்கள் சிக்கக்கூடாது.

ஈழவிடுதலைப்போராட்டத்தின் வரலாற்றை விரித்துப்பேசுகின்றபோது ஒரு சிலரால் மலையகத்தமிழர்கள் மலினப்படுத்தப்படுவதுண்டு. மலையகத் தமிழர்கள் ஈழவிடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கவில்லை என்றும் அவர்களுக்கு போராட்டக்குணம் இல்லை என்றும் குற்றஞ்சாட்டப்படுவதுண்டு. வீரம் என்றால் என்னவென்றே தெரியாத மலையகத்தவர்கள் கொத்தடிமைகளாக வாழும் கூட்டம் என ஏளனமாக பேசப்படுவதுமுண்டு.

அத்தகையவர்களுக்கு ஈழப்போராட்டத்தில் மலையகத் தமிழர்களின் பங்களிப்பை எடுத்துரைப்பதே இப்பத்தியின் நோக்கமாகும்.

"1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழர் தாயகமெங்கும் போர் மேகம் சூழ்ந்து கிடந்தது. தமிழர்களுக்கு எதிரான ஒட்டுமொத்த அடக்குமுறைகளும் சிங்கள இனவாத அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டன. இதனால், ஏற்பட்ட இழப்புகளை வெறும் வார்த்தைகளால் மட்டும் விபரித்துவிடமுடியாது!

வறுமை தலைவிரித்தாடியதால் குடும்பச் சுமையை தாங்குவதற்காக மலைநாட்டிலிருந்து பலர் கொழும்பை நோக்கி புறப்பட்டார். அவ்வாறு கொழும்புநோக்கி புறப்பட்டு வந்தவர்களில் ஒருவன்தான் சுதாகரன். அங்கு கடையொன்றில் வேலைபார்க்கத் தொடங்கினான்.

தினமும் கடைக்கதவு அடைக்கப்பட்ட பின்னர், இரவுப்பொழுதில் கூடவிருப்போருடன் கதைத்து பேசி நேரத்தைக் கழித்துவிட்டு உறக்கத்துக்குச் செல்வதுதான் வழமை.

ஆனால் அன்றுமட்டும் எல்லோரும் வானொலியைச் சுற்றியிருந்து எதையோ கூர்ந்து கேட்டபடியிருந்தார்கள். அன்றைய நாள் பி.பி.சி வானொலியில், செய்தியாளர் ஆனந்தி, தமிழீழத் தேசியத் தலைவரை சந்தித்துப் பெற்ற நேர்காணல் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. சுதாகரனும் கூட இருந்தவர்களுடன் இணைந்து தலைவரின் எண்ணங்களை செவிமடுத்தான்.

தலைவர் உதிர்த்த வார்த்தைகள் அவனை மெய்சிலிர்க்க வைத்தன. அன்றுதான் தமிழர்களுக்கென்றொரு தலைமை இருப்பதும், ஒரு கட்டுக்கோப்பான விடுதலைப்போராட்டம் நடந்துகொண்டிருப்பதையும் அவன் அறிந்துகொண்டான். அவனது நெஞ்சில் புதிய உத்வேகம் உருவானது. தலைவர் மீதும் விடுதலைப்போராட்டம் மீதும் இனம் புரியாத பற்று அவனுள் கருக்கொண்டது.

அன்றிலிருந்து அவனுள் மூண்ட விடுதலைத் தீ 1994 இல் அவனை தாயகம் நோக்கி நகர்த்தியது. பதுளையில் இருந்த அம்மாவிடம், "கொழும்பில் அடிக்கடி பிடிக்கிறாங்கள் அம்மா, நான் யாழ்ப்பாணம் போறன்" - என்று சொல்லி அம்மாவைச்சமாளித்துவிட்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்று இயக்கத்தில் இணைந்துகொண்டான்.

இந்தச் சுதாகரன் பின்னர் போராளியாகி களங்களிலே துணிச்சல் மிக்க ஒரு படைவீரனாக மாறினான்.

அது "ஜெயசிக்குறு" படை நடவடிக்கை மூலம் சிங்களப் படைகள் வன்னியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த காலம். முன்னேறி வரும் சிங்களப் படையை வழிமறித்து மாங்குளத்தில் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆதித்தன் (இயக்கப் பெயர்) அந்தச் சண்டைக் களத்தில் 82 mm எறிகணைச் செலுத்தி ஒன்றுடன் சிங்களப் படைக்கெதிராக சண்டையிட்டுக் கொண்டிருந்தான். அந்த மோட்டார் அணியில் பொறுப்பாளனும் அவனே. எத்தகைய நெருக்கடியான சூழல் ஏற்படினும், முடிவெடுத்துச் செயற்படுவது அவன் கையிலேயே தங்கியிருந்தது.

சண்டை கடுமையானதாயிருந்தது. "ஓயாத அலைகள் 2" என்ற பெருந்தாக்குதலை கிளிநொச்சிப் படைத்தளம் மீது புலிகள் மேற்கொண்டிருந்ததால், குறிப்பிட்ட அளவு போராளிகள்தான் அன்றைய சண்டையை எதிர்கொண்டனர்.

சண்டையின் ஒரு கட்டத்தில் புலிகளின் முன்னணி நிலைகளை ஊடறுத்து படைகள் தமிழர் பகுதியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தன. தொலைத்தொடர்புக்கருவி மூலம் இராணுவம் நிற்கும் நிலைகளைக் கேட்டறிந்து மோட்டார் மூலம் எறிகணைகளை அவன் வீசிக்கொண்டிருந்தான்.

நீண்ட நேரமாகச் சண்டை தொடர்ந்தது. நேரம் செல்லச் செல்ல எறிகணையை வீசுவதற்கான தூரவீச்சு குறைந்துகொண்டே போனது. இந்தத் தரவின் மூலம் இராணுவம் எங்களை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றதென்பதை ஆதித்தன் அறிந்துகொண்டான். அந்தக் களமுனையில் ஒரு நெருக்கடியான சூழல் உருவாகிக்கொண்டிருந்தது. ஆனால் ஆதித்தன் பதற்றப்படாமல் கூடவிருந்த போராளிகளுக்குத் தெம்பூட்டியபடி இடைவிடாமல் தாக்குதலை நடத்திக் கொண்டிருந்தான். எறிகணை வீச்சுக்கான தூரம் தொடர்ந்தும் குறைந்தபடியிருந்தது.

இன்னும் கொஞ்ச நேரம் தொடர்ந்து தாக்குதல் நடத்தினால் அவனது மோட்டார் நிலை எதிரியால் முற்றுகையிடப்படும் என்று அவனால் கணிப்பிட முடிந்தது. அப்படி முடிவெடுத்தால் எறிகணைகளை எதிரியிடம் இழக்கவேண்டிய நிலை ஏற்படும். அந்தநேரம் ஆதித்தன் ஒரு அதிரடி முடிவை எடுத்துக்கொண்டான். கடைசியாக மோட்டாரை அழிப்பதற்கு ஒன்றும், தங்களை அழிப்பதற்கு ஒன்றுமாக இரண்டு எறிகணைகளை வைத்துவிட்டு, ஏனையவற்றை எதிரி முன்னேறும் பகுதி நோக்கி விரைவாக அடித்து முடிப்பதென்பதே அந்த முடிவு.

இப்போது எதிரியின் தாக்குதல் இவர்களை அண்மிக்கின்றது. எதிரியின் துப்பாக்கிச் சன்னங்கள் இவர்களின் நிலையை நோக்கியும் சரமாரியாக வரத்தொடங்கியது. மிகக் கிட்டவாக எறிகணைகள் பறந்து வந்து கொண்டிருந்தன.

கடைசியாக 200 மீற்றர் வீச்செல்லைக்கு எறிகணையை அடிக்கும் கட்டளை கிடைத்தது. இராணுவம் துப்பாக்கிச் சண்டைக்கான வீச்செல்லைக்குள் வந்தாலும் அவர்கள் மோட்டார் சூடுகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள். இராணுவம் அவர்களைச் சூழ்ந்துகொள்ளும் கணங்கள் அண்மித்துக் கொண்டிருந்தன. ஆனால், பதற்றமில்லாமல் ஆதித்தனின் சுடுகுழல் இயங்கிக் கொண்டிருந்தது.

இராணுவம் இப்போது இவர்களின் மோட்டார் நிலையைக் குறிவைத்து தாக்கத் தொடங்கியது. இத்தனை நெருக்கடிக்குள்ளும் ஆதித்தன் தான் முடிவெடுத்த நிலை வரும்வரை தாக்குதலைத் தொடர்ந்தான். இராணுவத்தின் முற்றுகை வலைக்குள் மோட்டார் நிலை உள்ளாகிக்கொண்டிருந்தது.

ஆதித்தன் நினைத்தபடி எறிகணைகள் அனைத்தும் சுடப்பட்டு விட்டன. இனி, மோட்டாரை தகர்ப்பதற்கான நேரம். அதை விட மாற்றுவழிகள் இல்லை. நூற்றுக்கணக்கான எறிகணைகளைச் சுட்டதினால் தணல் போலப்பழுத்துப்போயிருக்கும் அந்த எறிகணைக் குழலைக் கொண்டு செல்வதென்பது சாத்தியமே இல்லாத ஒன்று. அத்தோடு எதிரியால் அவர்கள் சூழப்பட்டுக் கொண்டுமிருந்தார்கள்.

எனவே சுடுகுழலைத்தகர்த்துவிட்டு பின்வாங்குவதென்ற முடிவைத் தவிர மிச்சமாக எதுவுமில்லை. ஆயினும், ஆதித்தன் அப்படிச்செய்யவில்லை. கூட இருந்தவர்கள் எவருமே எதிர்பார்க்காத முடிவை அவன் எடுத்தான். இயக்கம் ஒரு எறிகணை செலுத்தியைப் பெறுவதற்கு எத்தகைய விலைகளைச் செலுத்துகின்றதென்பது அவனுக்கு நன்கு தெரியும். அதனால், அந்த எறிகணைச் செலுத்தியை அவன் இழக்க விரும்பவில்லை.

வெப்பத்தால் தகதகத்துக் கொண்டிருந்த அந்தச் சுடுகுழலை தனது தோளில் வைத்தபடி எதிரிக்கு எதையும் விட்டுவைக்காமல் முற்றுகையை உடைத்து வெளியேறினான் அவன்.

ஆதித்தன் மீண்டு வந்தபோது அவனது சுடுகுழல் பத்திரமாயிருந்தது. அவனது தோள்பட்டை மட்டும் வெந்து போய் பொக்களம் போட்டிருந்தது.

இப்படி களங்களில் பல சாதனைகளை நிகழ்த்திய வீரன் பின்னர் கரும்புலியாகி விடுதலைப் போருக்குப் பெரும் பலம் சேர்த்து வீழ்த்த முடியாத பெருங்கோட்டையென எதிரி மார்தட்டிய ஆனையிறவை மீட்கும் சமரொன்றிற்கு வலுச்சேர்த்து 25.12.1999 அன்று பாவப்பட்ட மக்களை மீட்கவந்த இயேசுநாதர் பிறந்ததாகச் சொல்லப்படும் நத்தார் நாளில், அடிமைப்பட்ட தன் இனத்தின் மீட்சிக்காகத் தன்னையே கொடையாக்கினான்.

■



# போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

**போரில் உயிரிழந்த தங்களது உறுப்பினர்களை எரிக்கப்போவதில்லை என்றும் புதைக்கப் போவதாகவும் முடிவெடுத்த விடுதலைப்புலிகள் அமைப்பு தொண்ணூறுகளில் வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கை. வித்துடல்கள் என்ற பதம் பயன்படுத்த தொடங்கிய இந்த வரலாற்று காலகட்டம் தொடர்பான பதிவு இது.**

வீரமரணமடைந்த புலி வீரர்களது உடல்கள் இனிமேல் தகனம் செய்யப் படமாட்டாது. அவைகள் புதைக்கப்பட வேண்டும் என்று நாம் முடிவெடுத்துள்ளோம். இம்முடிவானது போராளிகளுள் மிகப்பெரும்பாலானோரின் விருப்பத்திற்கிணங்கவே எடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர்களை தகனம் செய்வதற்கென்று அமைக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இப்பொழுது மாவீரர்கள் புதைக்கப்பட்டு அங்கே நினைவுக் கற்கள் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இது என்றென்றும் தியாகத்தின் சின்னமாக எமது மண்ணில் நிலை பெறும்.

மாவீரர்களின் உடல்கள் புதைக்கப்படவேண்டும் என நாம் ஏன் முடிவெடுத்தோம் என்பதையும் அதற்குரிய காரணிகளையும் இங்கே பார்ப்போம்.

### போராளிகளின் புகழுடல்கள் ஏன் புதைக்கப்படவேண்டும்?

போராளிகள் தனிமனிதர்கள் அல்ல. அவர்கள் ஒரு இனத்தின் காவலர்கள். அந்த இனத்தின் வழிகாட்டிகள். ஒரு புதிய வரலாற்றை படைக்கும் சிருஷ்டி கர்த்தாக்கள். இவர்களது வீரச்சாவுகள் வெறும் மரண நிகழ்வுகள் அல்ல. இவர்களது நினைவுகள் வரலாற்று சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்கவேண்டும். இந்த தியாக சின்னங்கள் எமது மக்களின் மனதில் காலங்காலமாக விடுதலை உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும்.

அதாவது போராளிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் சுதந்திர பெருஞ்சுடரை ஏற்ற உதவும் நெருப்பு கிடங்குகளாகவே பயன்படும்.

எனவேதான், போராளிகளது உடல்களைப் புதைத்து, கல்லறைகளை எழுப்பி, அதை என்றென்றும் உயிர்த் துடிப்புள்ள ஒரு நினைவுச்சின்னமாக நிலைநிறுத்த நாங்கள் விரும்புகின்றோம்.

### அன்புக்குரிய எமது பெற்றோர்களே, மக்களே!

எமது இயக்கத்தின் இந்த முடிவை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகின்றோம். இந்த முடிவு காலங்காலமாக இருந்துவந்த சம்பிரதாய சாஸ்திரங்களுக்கு முரணாக இருக்கின்றதே என நீங்கள் கருதலாம். ஆனால், உங்களது பிள்ளைகளான புலிவீரர்கள் இந்த சம்பிரதாயங்கள், சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் கடந்தநிலையில் இந்த நாட்டின் பொதுச்சொத்தாக - பொக்கிசமாக - இருக்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இப்பொக்கிசங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக்கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம் மண்ணில் இருந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இது புறமிருக்க, எமது சக தோழர்கள் சிலரது வீரமரணத்தின் பின் நடைபெறும் சில சம்பவங்கள் எமது மனதை பாதித்திருக்கின்றன. அதாவது, பெற்றோரோ உடன் பிறந்தவர்களோ உறவினர்களோ இல்லாது நடைபெறும் எமது போராளிகளின் இறுதிச்சடங்குகளை நாம் கண்டிருக்கின்றோம்.

என்னதான் எமது தோழர்கள் சூழ நின்று தகன நிகழ்ச்சிகளை நடாத்தினாலும்கூட அப்போராளியை பெற்றெடுத்து சீராட்டி வளர்த்த தாய் தந்தையரோ அல்லது உடன்பிறந்தவர்களோ அங்கே இல்லாதது எமது மனதை நெருடுகின்றது.

போராட்ட சூழல் காரணமாக அவர்கள் வரமுடியாதுவிட்டாலும் நாளை இப்பெற்றோர்களுக்கு அவர்களது பிள்ளையின் நினைவாக நாங்கள் எதைக்காட்டப்போகிறோம்?

ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான போராளிகளை தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டப்போகிறோம்?

அப்படியான சூழலில் அவர்கள் படும் துயரையும் அங்கலாய்ப்பையும் அனுபவ வாயிலாக நாம் அறிந்தே இருக்கின்றோம்.

எனவேதான், தனது பிள்ளையின் உடலைப்பார்க்காதுவிட்டாலும்கூட அவனது உடல் புதைக்கப்பட்ட கல்லறையை பார்த்து ஓரளவு ஆறுதல் அடையவாவது நாங்கள் உதவிசெய்வோம். அத்துடன் அடிக்கடி அக்கல்லறைக்கு சென்று அவனது நினைவுகளை மீட்டிப் பார்ப்பதுடன் ஓர் ஆத்மதிருப்தியையும் அவர்கள் அடைந்துகொள்வார்கள்.

அன்புக்குரியவர் ஒருவரின் சாவு சோகமானதுதான். ஆனால், அந்த சோகத்தை மறைக்கவேண்டும் என்பதன் அர்த்தம் அவரை மறக்க முயற்சிப்பதாக இருக்கமுடியாதுதானே?

கல்லறைக்கு மீண்டும் மீண்டும் செல்வதால் சோகம் அதிகரிக்கும் என்றில்லை. உண்மையில் அப்படிச் செய்வதால் மனம் நிம்மதி அடையும்.

எல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது. தகனம் செய்வதற்குப்பதிலாக புதைப்பது என்பது தமிழர் பண்பாட்டுக்கு முரணான செயலல்லவா என யாராவது வினா எழுப்பலாம்.

நீண்ட காலம்தொட்டு இருந்து வரும் “தகனம் செய்வது” தமிழரின் பண்பாடு என எண்ணுவது தவறானது. உண்மையில் பண்டைய தமிழரின் பண்பாட்டில் இறந்தவர்களது உடல் புதைக்கப்பட்டு நடுகல் வைக்கப்பட்டதாக போதுமான வரலாறுகள் உண்டு. புற நானூற்று இலக்கியமும் ஈமத்தாளி வடிவிலான தொல்லியல் சான்றுகளும் நடுகற்களும் இதை நிரூபிக்க போதுமானது.

ஆனாலும், இந்த ஆராய்ச்சிகள் ஒரு புறமிருக்கட்டும். உண்மையில் இந்த முறையை ஒரு சமூகசீர்திருத்தமாக நாங்கள் செய்யவில்லை. இது போராளிகளுக்கு மட்டுமே பொருந்தும். பொது மக்களுக்கல்ல. எனவே, இங்கே பண்பாட்டு பிரச்சினை எழ நியாயமில்லை. அத்துடன், புதைப்பது என்ற முடிவானது வெறும் இறுதிக்கிரியை நிகழ்ச்சி அல்ல. அது போராட்டத்தை உயிர்ப்புடன் என்றென்றும் வைத்திருக்கும் ஒரு சரித்திர தியாகத்தின் சின்னம்.

**நன்றி - விடுதலைப்புலிகள்**

# மாவீரர் வழிபாட்டு நடைமுறைகள்

## இதயக்கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்

"எமது வீர விடுதலை வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கின்றது. இவர்களது இறப்புகள் அர்த்தமற்ற இழப்புகள் அல்ல. இந்த வீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக – எமது போராட்டத்தின் உயிர் மூச்சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகம் அளிக்கும் ஊக்குசக்தியாக – அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாதவர்கள். சுதந்திரச்சிற்பிகள். எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச்சென்ற வீர மறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக – கௌரவத்திற்காக, பாதுகாப்பிற்காக – தமது இன்னுயிரை ஈந்துள்ள இந்த மகத்தான தற்கொடையாளர்கள் ( தியாகிகள் ) காலம் காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்படவேண்டியவர்கள்.

"ஒரு விடுதலை வீரன் சாதாரண வாழ்க்கையை வாழும் ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவன் ஓர் இலட்சியவாதி. ஓர் உயரிய இலட்சியத்திற்காக வாழ்பவன் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்பவன். மற்றவர்களின் விடிவுக்காக – விமோசனத்திற்காக – வாழ்பவன். சுயநலமற்ற, பற்றற்ற அவனது வாழ்க்கை உன்னதமானது. அர்த்தமுள்ள சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக அவன் தனது உயிரையும் அர்ப்பணிக்கத் துணிகிறான். எனவே விடுதலை வீரர்கள் அபூர்வமான மனிதப்பிறவிகள், அசாதாரணமான பிறவிகள்."





## அலங்காரம் (சோடனை)

வீரச்சாவு, வீரவணக்கக்கூட்டம், துயிலுமில்ல, மாவீரர் விசேடநிகழ்வு, வேறு அனைத்து நிகழ்வுகளுக்கான அலங்காரங்கள், சமூக சமய, வேறு அரசியல் சார்ந்ததாக இருக்காமல் சிவப்பு, மஞ்சள் நிறங்களைப் பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

துயிலுமில்ல மைதான நடுவில், பீடத்தில் சற்று உயரமான பெரிய சுடர் நாட்டப்பட்டிருக்கும். மக்கள் வெள்ளம் உணர்வு கொந்தளிப்போடு மைதானத்தைச் சுற்றி நின்று தியாகங்களை நெஞ்சில் நினைத்திடத் தீச்சுடர் ஏற்றப்படும். பொதுவான ஒருவர் மத்திய சுடரை ஏற்ற மாவீரரின் பெற்றோர் உரித்துடையோர் தீச்சுடரை சமகாலத்தில் ஏற்றுவர். சமகாலத்தில்ஒவ்வொரு இல்லங்களிலும், வாசலிலும்மாவீரரின் சுடர்ஒளியை அனைவரும் ஏற்றுவர்.

சுடரானது சுவாலை விட்டெரியும். ஒவ்வொரு சுடர்களிலும் மாவீரர்களின் முகங்கள் பிரகாசிக்கும். தமிழர் தாயகம் முழுவதும் சுடரொளி ஓங்கிப்பரவும். மக்கள் குமுறி எழுந்து கண்ணீர் விட்டு நிற்க தியாகிகளின் காவியங்கள் ஒவ்வொரு தமிழ் மக்கள் உணர்வுகளிலும் மீட்டப்படும்.

சுடரேற்றி தியாக தீபங்கள் இவை என்று கூறத்தக்கதாக நினைவு கூரப்பட வேண்டும். வானத்தில் மின்னும் நட்சத்திரங்கள் போல தமிழர் தாயகமெங்கும் மாவீரர் சுடர்கள் இந் நேரத்தில் ஒளிர வேண்டும். சிட்டி விளக்கேற்றக்கூடிய இடங்களில் தொகையான சிட்டி விளக்குகள் ஏற்றி நினைவு கூரலாம். வாசலில் தீபங்கள் எரியும் போது பொது இடங்களில் பெரிய சுடர்களை ஏற்றியும் நினைவுகூர வேண்டும்.

இந்த சுடரேற்றும் நிகழ்வானது, விடுதலைப்பாதைக்கு உறுதியையும், உணர்வையும் கொடுத்து நிற்கின்றது.

## தலைவர் அவர்களின் சிந்தனையிலிருந்து...



**"மாவீரர்**
தேச விடுதலைக்காகத் தம்மை
முழுமையாக அர்ப்பணித்தும்
எதிரி பாசறையை
வெடிகுண்டு கொண்டு தகர்க்கும்
சத்திய வேள்வியில் நித்தமும் வேகி
கொடியது பறந்திட
உயிரினை ஈந்து
உடலை உரமிட்டு
செங்குருதியால்
வரலாறு படைத்து
தமிழர் மண்ணெங்கும்
நினைவுச் சிலைகளாய், ஓவியமாய்
வெள்ளை மலரேந்திய
வேதங்களாய்
ஈழமண்ணில் புதுவிதையாய்
விடுதலையின் தீச்சுடராகி
தேசமெங்கும் சோதியாய் நிற்பவரே
மாவீரராவர்.

## ஏன் இவர்கள் மாவீரர்கள்?

தமிழ் இனவிடிவுக்காய் மரணித்தவர்கள். தேசம் தூங்கியபோது விழித்திருந்தவர்கள். உணர்வுத் தீயை தமக்குள்ளே சிறைபோட்டவர்கள் தேசமக்களின்பாசப்பிணைப்புகளுக்காகதமது பாசங்களைப்பொசுக்கியவர்கள். பள்ளிப்பராயத்தை பள்ளித் தோழருக்காய் பறிகொடுத்தவர்கள்.

ஊரெல்லாம் உறங்கும்வேளை உறக்கமின்றி விழித்தவர்கள் எல்லைசுற்றி வேலிச்சிலையாக நின்றவர்கள் தமது மக்களுக்காக கால்களை, கரங்களை இழந்து நின்றவர்கள்.

## மாவீரர் நாள் நவம்பர் 27

தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலைப் போருக்கு வீறு சேர்த்த மாவீரர்கள் அவர்களின் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்களின் வீரங்களும் ஈகங்களும் அரும்செயல்களும் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப்பட வேண்டும். அந்த மாவீரர்களின் பெற்றோர்களும் குடும்பத்தினரும் அவலப்படக் கூடாது என்ற நோக்கின் அடிப்படையில் உருவானதுதான் மாவீரர் நாள்.

விடுதலைப் போருக்கு இன்னுயிரை ஈந்து உரமாகிப் போன மாவீரர்களின் எண்ணிக்கை பத்து நூறு என்ற நிலை மாறி ஆயிரக்கணக்காக உயர்ந்துவிட்ட நிலையில் ஒவ்வொரு மாவீரர்களையும் தனித்தனியாக அவரவர் நினைவு நாட்களில் நினைவு கூருவதைத் தவிர்த்து விடுதலைப் போரின் முதல் மாவீரரான லெப்டினன்ட் சங்கர் அவர்கள் வீரச்சாவடைந்த நவம்பர் 27 ஆம் நாளை பொதுவான நாளாக தேர்ந்தெடுத்து 1989 ஆம் ஆண்டிலிருந்து இத்தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது.

## நவம்பர் 27 இரவு நிகழ்வுகள்



**நினைவொலி எழுப்புதல். (6.05 மணி )**

கார்த்திகை 27 அன்று 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் மணி ஒலி ஒரு மணித்துளி நேரம் எழுப்பப்படும். உயிர்காப்பு பணியில் ஈடுபடும் ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்ச்சி தொடங்குவதற்கு ஏற்ற வகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்படல் வேண்டும்.

**அகவணக்கம் (6.06 மணி )**

மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் 6.06 மணிக்கு மாவீரர்களுக்கான ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் இல்லங்களிலும், ஏனைய இடங்களிலும் இருக்கும் தமிழ் மக்கள் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும்.

**ஈகச் சுடரேற்றுதல் (6.07)**

அகவணக்கம் நிறைவுற்றதும் 6.07 மணிக்கு ஈகச்சுடர் ஏற்றப்படல் வேண்டும் (மாவீரர்களின் பெற்றோர் அவரவர் சுடர் ஏற்ற வேண்டிய கல்லறைகள், நினைவுக் கற்களுக்கு முன்னால் 5.15 மணிக்கு நிற்கக்கூடிய வகையில் அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.)

மாவீரர் துயிலுமில்லங்களிலுள்ள மாவீரர் கல்லறைகள், நடுகற்கள் முன்மாவீரர்களின்பெற்றோர், குடும்பத்தினர் அவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் ஈகச்சுடர் ஏற்றுவர்.

இவை தவிர துயிலுமில்லங்களுக்கு வராத பொதுமக்கள் தமது இல்லங்களில், பொது இடங்களில், அலுவலகங்களில், விளையாட்டு இடங்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் உரிய நேரத்தில் உரிய முறைப்படி ஈகச்சுடர் ஏற்றும்போது மாவீரர் பாடல் ஒலிக்கப்படும் (மாவீரர் ஈகச்சுடர் ஏற்றப்படும் நேரத்தில் அதன் நோக்கத்தைப் புரிந்துகொள்ளாது வீதிகளில் ரயர்களை எரிப்பதோ அல்லது வேறு வகையில் ஒலி,ஒளி உருவாக்குவதோ தவிர்க்கப்படல் வேண்டும்.

## நிகழ்வு விதிகளில் அலங்காரங்களும் நிறங்களும்

- சிவப்பு, மஞ்சள், நிறங்களைக் கொண்டும் கறுப்பு கரும்புலிகள் தினத்திற்கும் கரும்புலிகள் சம்பந்தமான நிகழ்வுகட்கு மட்டும் கலந்து சோடிக்கலாம்.

- வீரச்சாவு கல் நாட்டலுக்கு சிவப்பு, மஞ்சள் துணிகளைப பாவித்தல் வேண்டும்.

- மேசைவிரிப்பு, பீடவிரிப்புகளும்சிவப்பு, மஞ்சள் துணியாகவே இருத்தல் வேண்டும். வெள்ளைத்துணி பாவிப்பதை தவிர்த்தல் நன்று.

- இச்சோடனைகள் தனித்துவமாக மாவீரர்களின் தற்கொடைத் தியாகம், அமைப்பு இலட்சியங்களை மக்கள் மனங்களில் தோன்றிப் பதிந்து எமது போராட்டத்தின்பால் இணைந்து செயற்பட வழிசமைத்தல் வேண்டும்.

**கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள்**
**ஆரம்ப நிகழ்வுகள்**

1. பொதுச்சுடர்
2. ஈகச்சுடர்
3. மலர்வணக்கம்
4. அகவணக்கம்

● எமது மாவீரர் நிகழ்வுகள் அமைப்பு நிகழ்வுகள் அனைத்திலும் ஈகச்சுடர் ஏற்றுதல் கட்டாயமாகும். மங்கள விளக்கு ஏற்றக்கூடாது

● அகவணக்கத்துக்கு நேரம் குறிக்கக்கூடாது.

**தவிர்க்கப்பட வேண்டியவை**

1. அஞ்சலி, மௌன வணக்கம், மலரஞ்சலி, மங்கள விளக்கு, அஞ்சலியுரை, அஞ்சலிக்கூட்டம், அகவணக்கம் - ஒரு நிமிடம் இரு நிமிடம் எனக்குறித்துக் கூறுதல்.
2. தமிழரின் கலாசார உடை தவிர்ந்த ஏனைய உடையுடன் வருதல் இயன்றளவில் தவிர்க்கப்படல் வேண்டும்.
3. கைத்தொலைபேசி பாவனை துயிலுமில்ல வளாகத்திற்குள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும்.
4. பணிக்குழுவால் அனுமதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தவிர்ந்த எவரேனும் புகைப்படம் எடுத்தல் ஒளிப்பதிவு நடவடிக்கைகளில் இருந்து விலகி இருத்தல் வேண்டும்.
5. மாவீரர்களின் புனிதத்தன்மையைப் பாதிக்கும் வேறு எவ்வகையான செயற்பாடுகளிலிருந்தும் அனைவரும் முற்றாக விலகி இருத்தல் வேண்டும்.

**போற்றப்பட வேண்டிய பண்பாடாகட்டும்**

எமது வடக்கு கிழக்கு இணைந்த தாயக பிரதேசத்தில் தேசிய நாட்களில் மாவீரர் நாள் மிக முக்கிய நாளாகும். மாவீரர் நாள் என்பது, தமிழரின் விடிவுக்காகவும், உயர்வுக்காகவும், உழைத்து உயிரைத் தற்கொடையாக ஈந்து, இந்த மண்ணிற்கே உரமாகிவிட்டவர்களினதும், எமது மூச்சுடன் கலந்து விட்டவர்களினதுமாகிய நினைவு நாளாகும்.

எங்கள் உயிரிலும் மேலான குழந்தைகளுக்கும் எமது போராளிகளுமான இம்மாவீரர்களின் தியாகம், அவர்களின் உணர்வுகள், இலட்சிய தாகம், கனவுகள் என்பன எம்மால் மறக்கப்பட முடியாதவையாகும், புனிதத் தன்மை வாய்ந்ததுமாகும். காலம் காலமாக நினைவு கூர்ந்து என்றும் போற்றப்பட வேண்டியவையாகும்.

இம் மாவீரர்களின் நினைவுகள் எம்மை வழிநடாத்தும் உந்து சக்தியாக என்றும் இருக்கும் மாவீரர்களினது இத்தகைய நினைவுகூரல் என்பது ஒரு நிகழ்வாக இருந்து விடாது எமது நாட்டு மக்களின் வரலாற்றுச் சுவடியாகவும், பண்பாட்டுக்குரியவையாகவும் வளர்ந்து வரவேண்டும்.

இந்த எமக்குரிய உயரிய நிகழ்வை தத்துவார்த்தமாகவும் உணர்வு பூர்வமாகவும் நிலைநாட்டுவதற்காக எமது தமிழ் மக்கள் அனைவரினதும் மனமுவந்த, ஒருங்கிணைந்த பங்களிப்புக்களை வேண்டி நிற்கின்றோம்.

## மாவீரர் வாரத்தை எதிர்கொள்ளுதல்

மாவீரர் நாளானது தமிழர் எழுச்சி நாளாகத் தமிழ் மண்ணெங்கும் கொண்டாடப்படுகின்றது. எழுச்சி மிகுந்த இந்த மாவீரர் வாரமானது நவம்பர் 21 இல் தொடங்கி நவம்பர் 27இல் முடிவடைகின்றது. இம் மாவீரர் நாட்களை அனுட்டிக்கும் முகமாக நவம்பர் 21 ஆம் நாளுக்கு முன்னதாகவே தமிழர் நிலமெங்கும் புனிதப்பட்டு விடுகிறது. மாவீரர் தூபிகள், நிழற் படங்கள் அமைந்த இடங்கள், இல்லங்கள், ஒழுங்கைகள், வீதிகள், கல்விக்கூடங்கள், பொது இடங்கள், காரியாலயங்கள் அனைத்தையுமே மக்கள் அனைவரும் தனித்தும் ஒருமித்தும் புனிதமாக்கிவிடுகின்றனர். இவையாவும் மாவீரர் நினைவாக அலங்கரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு தாயகம் புதுப் பொலிவுடன் விளங்கும்.

# தேசியத் தலைவரின் 20 வருட மாவீரர் நாள் உரைத் துளிகள்!



“பிரபாகரன் தனிமனிதன் அல்ல. ஓர் இனத்தின் பிரதிநிதி. பிரபாகரன் தமிழீழத்திற்கு துரோகம் செய்தால் பிரபாகரனும் சுட்டுக்கொல்லப்பட வேண்டியவரே”

“இந்தியா ஒரு இயக்கத்தை மட்டும் நம்பியிருக்க கூடாது என்று எண்ணியது. அதனால் எல்லா இயக்கங்களுக்கும் பயிற்சியளித்து தமக்கு ஒத்துப்போகும் இயக்கங்களை பாவித்து ஒத்துவரா இயக்கங்களை அழிக்க எண்ணியது. அங்குதான் இந்தியா தவறிழைத்தது. அதில் எங்களையும் இணைத்துக்கொண்டது”

**- 1989**

“இந்த மண்ணின் மைந்தர்களை பெற்றெடுத்த பெற்றோர்களை நான் போற்றுகிறேன். உங்களுடைய பிள்ளைகள் தமது உயிருக்கும் மேலாக தாய் நாட்டை நேசித்தார்கள். இந்த உத்தமமானவர்களை புனித இலட்சியத்திற்காக உகந்தளித்த பெற்றோர்களாகிய நீங்கள் நிச்சயம் பெருமை கொள்ள வேண்டும். உங்களுடைய குழந்தைகள் சாகவில்லை. சரித்திரமானவர்கள்”

**- 1990**

“நாம் இனத்துவேசிகள் அல்லர். போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்லர். நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ விரோதிகளாகவோ பார்க்கவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கிறோம். சிங்கள பண்பாட்டை கௌரவிக்கிறோம்”

**- 1991**

“எமது எதிரிக்கு உலகம் ஆயுதத்தையும் நிதியையும் அள்ளி வழங்குகிறது. நாம் உலகத்திடம் கை நீட்டி நிற்கவில்லை. எவரிடம் தங்கி நிற்கவில்லை. நாம் எமது சொந்த மண்ணில் சொந்த மக்களில் சொந்த கால்களில் தங்கி நிற்கிறோம்”

**- 1992**

“எமது இயக்கம் சமாதான முயற்சிக்கு தடையாக இருந்ததில்லை. சிங்கள அரசுக்கு எத்தனை சந்தர்ப்பங்களை வழங்கினோம். திம்பு முதல் கொழும்பு வரை பேச்சுக்கு சென்றோம். ஆனால் தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதனையும் முன்வைக்க மறுத்தது. சமரச வழியை கைவிட்டு போர்க்களத்தில் தீர்வுகாண விரும்பியது. தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என சித்திரித்துகாட்டியது. எல்லாவற்றுக்கும் மேலாக இனப்பிரச்சினை என்பதே இல்லை எனபகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது”

**- 1993**

“சமாதான வழியில் தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கு தீர்வுகாண அரசு முயற்சிகளை எடுக்கும் எனில் நாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம். தமிழரின் தேசியப்போரட்டத்தின் இன்றைய வளர்ச்சியை கருத்தில் கொண்டு உருப்படியான சுயாட்சி திட்டங்கள் முன்வைக்கப்படுமாயின் நாம் அதனை பரிசீலனை செய்ய தயாராக இருக்கின்றோம்”

**- 1994**

“யாழ்நகரையும் வலிகாமப் பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் ஒட்டுமொத்த மக்களும் சென்ற வரலாற்று நிகழ்வானது அரசின் தந்திர உபாயத்திற்கு சாவு மணி அடித்தது. அரசின் போர் நடவடிக்கையையும் அதற்கு அரசு கற்பிற்கும் அபத்தமான காரணத்தையும் யாழ்ப்பாண தமிழ் மக்கள் ஏகமனதாக நிராகரித்து விட்டனர் என்பதையே இந்த இடம் பெயர்வு நிகழ்வு எடுத்துகாட்டுகிறது. ஆக்கிரமிப்பாளனுக்கு அடிபணிந்து போகாமல் சுதந்திர மனிதர்களாக சுயகௌரவத்துடன் வாழ்வதற்கு எவ்விதத் துயரையும் எதிர்கொள்ள எமது மக்கள் துணிந்து நிற்கிறார்கள் என்பதையே இந்த இடம் பெயர்வு உலகத்திற்கு பறைசாற்றியுள்ளது”

**- 1995**

“மூன்றாம் தரப்பு மத்தியத்துவம் என்றும் புலிகளுடன் பேசத்தயார் என்றும் சமீபத்தில் அறிக்கைகளை விட்டுவரும் சந்திரிகா, புலிகள் இயக்கம் ஆயுதங்களை சரணடைவு செய்ய வேண்டும் என்ற கேலிக்கூத்தான நிபந்தனையையும் முன்வைக்கிறார். எந்த ஒரு தன்மானமுள்ள விடுதலை இயக்கமும் இத்தகைய அவமதிப் பூட்டும் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை”

**- 1996**

“மாவீரரின் வீர வழிபாட்டு மரபானது தமிழினத்தின் விடுதலைஎழுச்சிக்கு உந்துசக்தியாக இருந்துவருவதாகவும் சிங்கள ஆட்சியாளர்கள் கருதினர். இத்தகைய இனத்துவேசப் பகையுணர்வால் உந்தப்பட்ட சிங்களப் பேரினவாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்க முடியாத ஒரு படுபாதகச் செயலில் இறங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடு எதிர்ப்படைகளின் பிடியில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நிகழ்ந்தது. தமிழீழத் தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியாற் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. அவர்களது துயிலும் இல்லங்கள் அழிக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக, சரித்திர நாயகர்களாக, தேசிய வீரர்களாகத் தமிழர்களால் போற்றிப் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி, அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களைச்சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான, கீழ்த்தரமான இழிசெயலென்றே நான் கூறுவேன்”

**- 1997**

“எமது மக்களை அரவணைத்து - இணைத்து - வாழவும் விரும்பாமல், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடாமல், எமது மக்களை அடிமைப்படுத்தி ஒழித்துக்கட்டவே சிங்கள அரசுகள் முனைந்தன. எனவேதான், அன்று தொட்டு இன்றுவரை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக, நாம் போராடி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டோம். வரலாற்றின் கட்டாயங்களுக்கு ஏற்ப எமது போராட்ட வடிவங்கள் மாறிய போதும் எமது உரிமைகளுக்கான எமது சுதந்திர வாழ்விற்கான போராட்டம் தொடர்கிறது. இப் போராட்டம் வளர்ந்து விரிந்து இன்று இருதேசங்கள் மத்தியிலான போராக பேயுருவம் பெற்றிருக்கிறது”

**- 1998**

“போரியற் கலையில் புலிப்படை வீரர்களின் அபாரமான வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் இந்த ‘ஓயாத அலைகள் மூன்று; என்ற வன்னிப் பெரும் சமர் உலகத்திற்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது”

**- 1999**

“எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று நாமொரு முக்கிய திருப்புமுனையை அடைந்திருக்கிறோம். எமது படையணிகள் ஒப்பற்ற இராணுவ சாதனைகளை நிலைநாட்டி எமது தேசத்தின் கலாசாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து வைத்திருந்த ஆனையிறவுப் பெருந்தளம் புலிப்படை வீரர்களால் மீட்கப்பட்டமை இவ்வாண்டு நாம் ஈட்டிய மாபெரும் இராணுவ வெற்றியாகும்” **- 2000**

“விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால்தான் இலங்கைத்தீவில் சமாதானம் தோன்றுவதற்கு வாய்ப்புண்டு. இப்படியான சூழ்நிலையிற் ஸ்ரீலங்கா அரசின் அழுத்தத்திற்கு இசைந்து மேற்குலக நாடுகள் எம்மீது தடைகளை இறுக்கினால் அது சமாதானப் பேச்சுக்கும் சமாதான வழியிலான தீர்விற்கும் வழிகோலப்போவதில்லை. மாறாக, சமாதானப் பேச்சுக்குப் புலிகள் மீதான தடைநீங்க வேண்டும் என்ற எமது மக்களின் கோரிக்கைக்கு, இந்நடவடிக்கைகள் மேலும் வலுச்சேர்க்கும்”

**- 2001**

“தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றியபோதும் இயல்பு நிலை தோன்றவில்லை. ‘உயர் பாதுகாப்பு வலயங்கள்’ என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை, சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன”

**- 2002**

“எமது இடைக்கால நிர்வாக யோசனைகளுக்குச் சிங்கள இனவாத சக்திகளிடமிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. தனித் தமிழ் அரசுக்கு அத்திவாரமாக எமது திட்டம் அமைவதாகச் சிங்கள இனவாதக் கட்சிகளும் ஊடகங்களும் கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. இந்திய ஊடக உலகத்திலிருந்தும் இந்திய அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தும் இதே போன்று கண்டன விமர்சனங்களும் வந்து கொண்டிருக்கின்றன”

**- 2003**

“சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை”

**-2004**

“சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையென்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்”

**-2005**

“சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு நீதியின் வழிநடக்கும் உலகநாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்”

**-2006**

“எமது மக்கள் வரலாற்றிலே என்றுமில்லாதவாறு ஒரே தேசமாக, ஒரே மக்களாக ஒரே அணியில் ஒன்றுதிரண்டு நிற்கின்றனர். ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட இனமாகத் தமக்கு முன்னால் எழுந்த எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதியுடன் நிமிர்ந்து நிற்கின்றனர்”

**- 2007**

தமிழர் உலகின் எந்த மூலையில் வாழ்ந்தாலும் எந்தக் கோடியில் வளர்ந்தாலும் எமது தேச விடுதலைக்கு உறுதியாகக் குரலெழுப்பி, எமது சுதந்திர இயக்கத்தின் கரங்களைப் பலப்படுத்துமாறு அன்போடு வேண்டுகிறேன். அத்துடன், தங்களது தாராள உதவிகளை வழங்கித் தொடர்ந்தும் பங்களிக்குமாறும் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே தேச விடுதலைப் பணியைத் தீவிரமாக முன்னெடுத்துவருகின்ற புலம்பெயர்ந்து வாழும் எமது இளைய சமுதாயத்தினருக்கும் எனது அன்பையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்” **-2008**

# முதலாவது மாவீரர் தின உரையில் தலைவர் சொன்னது என்ன?



இதுவரை காலமும் எமது புனித இலட்சியமானதமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்.

எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட படை வீரர்களின், பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர்களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களை கொண்டாடுவது வழக்கம். உங்களுக்குத் தெரியும் இதுவரை காலமும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட்ட நினைவு நாளைக் கொண்டாடுவது வழக்கம். வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத்தமாக வருடத்தில் ஒரு நாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப் போராளிகளில் முதலாவதாக வீரச்சாவு அடைந்த சங்கரின் நினைவு தினமாக மாவீரர் நாளை நாங்கள் பிரகடனப்படுத்தி உள்ளோம்.

அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல்எமதுவிடுதலைப்போராட்டத்திலும் தலைவர்களை மட்டும் பிரித்து அவர்களது செய்கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளிகளும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போராளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த தலைவர்களில் இருந்து சாதாராணமாகப் போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர் வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லாப் போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன்றாக நினைத்து மாவீரர் நாளாக கொண்டாடுகிறோம். காலப் போக்கில் குறிப்பிட்ட சில ஆட்களுக்கே முக்கியத்துத்துவம் கொடுக்கப்படும் நிலை தடுக்கப்பட்டு எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கு முடிவெடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிகளையும் பெண்களையும் மதிக்காத ஓர் இனம் காட்டுமிராண்டி இனமாகத்தான் மாறி அழிந்து விடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள்.

அதே வேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம். இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது.

எமது இனம் உலகிலேயே தலை நிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்."

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!.

(1989இல் முதலாமாண்டு மாவீரர் நாள் விழாவில் மேதகு பிராபாகரன் ஆற்றிய உரையின் ஒரு பகுதியே மேற்படி உரையாகும். அன்று முதல் பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையை 2008ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 20 ஆண்டுகள் நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.)





எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# மாவீரர் துயிலும் இல்லங்கள்

**மட்டக்களப்பு:**
தரவை
தாண்டியடி
கல்லடி
மாவடி

**கிளிநொச்சி:**
கிளிநொச்சி
முழங்காவில்
வவுனியா:
ஈச்சங்குளம்

**முல்லைத்தீவு:**
முள்ளியவளை
அலம்பில்
ஆலங்குளம்
வன்னி விளான்குளம்
விசுவமடு
இரணைப்பாலை

**அம்பாறை:**
கஞ்சிகுடிச்சாறு

**மன்னார்:**
ஆட்காட்டி வெளி
பண்டிவிரிச்சான்

**யாழ்ப்பாணம்:**
கோப்பாய்
கொடிகாமம்
சாட்டி (வேலணை)
எள்ளங்குளம்
உடுத்துறை

**திருகோணமலை:**
பெரியகுளம்
ஆலங்குளம்
உப்பாறு
தியாகவனம்



மொழியாகி, எங்கள் மூச்சாகி, நாளை
முடிசூடும் தமிழ் மீது உறுதி.
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன்
வரலாறு மீதிலும் உறுதி.
விழிமூடி, இங்கே துயில்கின்ற வேங்கை
வீரர்கள் மீதிலும் உறுதி.
இழிவாக வாழோம், தமிழீழப் போரில்
இனிமேலும் ஓயோம் உறுதி.

தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய
சந்தனப் பேழைகளே! – இங்கு
கூவிடும் எங்களின் குரல்மொழி கேட்குதா?
குழியினுள் வாழ்பவரே!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள்
உறவினர் வந்துள்ளோம் – அன்று
செங்களம் மீதிலே உங்களோடாடிய
தோழர்கள் வந்துள்ளோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே
வணங்குகின்றோம் – உங்கள்
கல்லறை மீதிலெம் கைகளை வைத்தொரு
சத்தியம் செய்கின்றோம்
சாவரும் போதிலும் தணலிடை வேகிலும்
சந்ததி தூங்காது – எங்கள்
தாயகம் வரும் வரை தாவிடும் புலிகளின்
தாகங்கள் தீராது.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.

உயிர்விடும் வேளையில் உங்களின் வாயது
உரைத்தது தமிழீழம் – அதை
நிரை நிரையாகவே நின்றினி விரைவினில்
நிச்சயம் எடுத்தாள்வோம்
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும்
தனியரசு(சு) என்றிடுவோம் – எந்த
நிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின்
நினைவுடன் வென்றிடுவோம்.

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை
இங்கே திறவுங்கள்.
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே
மறுபடி உறங்குங்கள்.



# மாவீரர்நாள் வருகிறது, கூடவே இடைச்சொருகல்களும் வரலாம்!

● தயாளன்

*"தோழமைக்கு உரிமை கொடு*
*கடமை நேரங்களில் தவிர்த்துக்கொள்"*
**–தமிழீழ தேசியத்தலைவர்**

தலைவரது படத்துடன் மேற்குறிப்பிட்ட வசனங்களைக் கொண்ட புகைப்படம் பல முகாம்களில் காட்சியளித்தது. ஒருநாள் தற்செயலாக இந்தப்படம் அவரது கண்ணில் பட்டுவிட்டது. "நான் எப்ப இதைச் சொன்னனான்?" என்று கேட்டார் அவர். வசனங்கள் சரியா,பிழையா என்பதை விட தான் சொல்லாத ஒன்றை சொன்னதாகக் குறிப்பிட்டால் எதிர்காலத்தில் இதைப்போல மேலும் பல சம்பவங்கள் நடந்து விடுமே என்ற எச்சரிக்கை உணர்வு அவருக்கு ஏற்பட்டது. இந்தச் செய்தியை அறிந்ததும் இந்த வசனங்களைத் தாங்கிய புகைப்படங்கள் ஏனைய முகாம்களிலும் காணாமற் போயின. இது அவர் உயிரோடு இருக்கும் போது நடந்த விடயம் என்பதால் உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 'நல்லாயிருக்கிறதே'என எங்கேயோ வாசித்த வசனங்களின் கீழ் தலைவர் என்று முதன்முதல் குறிப்பிட்ட அந்தப் போராளி நிச்சயம் அதன் பாரதூரத்தை உணர்ந்திருப்பார்.

1987 செப்ரெம்பர் 26 ஆம் திகதி எம்மை விட்டுப் பிரிந்தான் திலீபன். 1983 திருநெல்வேலி தாக்குதலைத் தொடர்ந்து போராட்டத்தின் பால் ஈர்க்கப்பட்ட இளைஞர்களில் அவனும் ஒருவன். வந்த புதிதிலேயே பிரதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டவர்களில் திலீபனும் ஒருவன். கோம்பையன் மணல் சுடுகாட்டுப்பகுதியிலிருந்து காரைநகர் வரையான பகுதிக்கு அரசியல் பணிக்காக அனுப்பப்பட்ட இவனுக்கு ஒரு துவிச்சக்கரவண்டி மட்டுமே வழங்கப்பட்டது. மிக நீண்ட பிரதேசத்தில் விடுதலையுணர்வைக் கொண்ட இளைஞர்களை இனங்கண்டு புலிகள் இயக்கத்தவராக மாற்றுவதுடன் மக்களையும் அணி திரட்டுவது இவனது பணி. இவனைப் போலவே கல்வியங்காட்டிலிருந்து அச்சுவேலி வரை, இணுவிலிருந்து காங்கேசன்துறை வரை, நாவற்குழியிலிருந்து இயக்கச்சி வரை, பண்ணைப் பாலத்திலிருந்து தீவுப்பகுதி முழுவதும், கிளிநொச்சி மாவட்டம் முழுவதற்குமென, வவுனியா மாவட்டத்துக்கென தலா ஒவ்வொருவர் நியமிக்கப்பட்டனர்.

யாழ். மாநகரசபைப் பகுதிக்கென ஒருவரும், பருத்தித்துறை, வல்வெட்டித்துறைக்கென தலா ஒவ்வொருவரும் நியமிக்கப்பட்டனர். பண்டிதரின் நெறிப்படுத்தலில் அரசியற் பணிகளை முன்னெடுத்து வந்தவர், மட்டக்களப்புக்கு அனுப்பப்பட்டதால் அவரது இடத்துக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவனான சுகந்தன் (ரவிசேகரம்) நியமிக்கப்பட்டார். இவர் இயக்கத்திலிருந்து விலகியதும் அந்தப் பொறுப்பு திலீபனுக்கு வழங்கப்பட்டது.

திலீபன் பொறுப்பெடுத்த காலத்தில் ஏற்கனவே இந்தியப் பயிற்சிக்கென அனுப்பப்பட்ட போராளிகள் 200 பேரில் கணிசமானோர் நாட்டுக்குத் திரும்பி வந்தனர். இதனால் அரசியற்பணிகளை விஸ்தரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இயக்கத்தின் அதிகாரபூர்வமான "விடுதலைப்புலிகள்" பத்திரிகை இந்தியாவிலேயே அச்சிடப்பட்டு வந்தது. சுதந்திரன் பத்திரிகை ஆசிரியரான கோவை மகேசனால் வெளியிடப்பட்ட "வீரவேங்கை"யும் அங்கேயே அச்சிடப்பட்டது.

இவற்றை நாட்டுக்குக் கொண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டது. அவ்வப்போதைய நிலைமைகளை உடனே வெளியிட இங்கேயே ஒரு பத்திரிகையை வெளியிட வேண்டுமென தளபதி கிட்டுவும், மாவட்ட அரசியற் பொறுப்பாளர் திலீபனும் தீர்மானித்தனர். "களத்தில்" என்று பெயரிடப்பட்ட அந்தப்பத்திரிகைக்கு திலீபனே ஆசிரியராகவுமிருந்தான். அவனது கருத்துக்கள் 'களத்தில்' பத்திரிகையிலும், ஏனைய பத்திரிகைகளுக்கான அறிக்கைகளாகவும் வெளிவந்தன. குறிப்பாக இவன் பிரதேசப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட போது இவனது உதவியாளனாகச் செயற்பட்டு பின்னர் புன்னாலைக்கட்டுவன் பிரதேசப் பொறுப்பாளராக விளங்கியதுடன் இவன் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த பன்னிரு நாட்களும் இவனது அருகிலேயே இருந்த ராஜனுக்கு இவன் என்னென்ன



சொன்னான், எதை எதை எழுதினான் என்பதும் சந்தேகமறத் தெரியும்.

திலீபன் இயக்கத்திலிருந்து உயிர்பிரியும் வரை எமது மண்ணில் தேர்தல்கள் எதுவும் நடைபெறவில்லை. இந்திய இராணுவத்தின் வருகைக்குப் பின்னர் தான் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பன நடைபெற்றன. இந்திய ராணுவம் சென்ற பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகள் மீண்டும் உருவாகின. பின்னர் தீவுப்பகுதிகள் படையினர் வசமாகின. அங்கிருந்த சொற்ப மக்கள் மத்தியில் வாக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களுக்கென ஒன்பது பேர் ஈ.பி.டியின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகினர் என அறிவிக்கப்பட்டது.

இந்தக்குழுவின் சார்பில் போட்டியிட்ட ஒருவருக்கு ஒரே ஒரு வாக்கே (அதாவது அவரின் வாக்கு )மட்டுமே கிடைத்தது. அவரது மனைவியோ, அதே அணியில் போட்டியிட்ட ஏனையவர்களில் ஒருவரோ கூட இவருக்கு வாக்களிக்கவில்லை. ஒருவர் மூவருக்கு விருப்பு வாக்களிக்கலாம் என்ற போதிலும் கூட ஒரே ஒரு வாக்கு கிடைத்ததென்றால் டக்ளஸ் கூட இவருக்கு வாக்களிக்கவில்லை போலும்.

பி.பி.ஸி நிருபர் ஆனந்தி டக்ளஸிடம் "இத்தனை குறைந்த வாக்குகளுடன் ஒன்பது ஆசனங்களைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகிச் செல்வது சரியென உங்கள் மனச்சாட்சிக்குத் தெரிகிறதா?" எனக் கேட்டார். இதற்கு டக்ளஸ் "இதில் சரி, பிழை என்பதற்கு அப்பால் இந்தச் சூழ்நிலையில் பதவிகளைப் பொறுப்பேற்று எவ்வாறு மக்களுக்கு சேவையாற்றலாம் என்பதே எமது நோக்கம்" எனப் பதிலளித்தார்.

ஈ.பி.டிபியை விட முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஒரு இடம் கிடைத்தது. டாக்டர் இலியாஸ் இந்தப்பதவிக்கு தெரிவானார்.

ஈ.பி.டியினர் இவ்வாறு தெரிவாகியமை பற்றி பொதுவாக மக்களிடையே விசனம் உண்டாயிற்று. அப்போது லண்டனில் தன்னை விட இயக்க விசுவாசி எவனுமே இருக்க முடியாது எனக் கருதிய ஒரு புண்ணியவான் கற்பனையில் திலீபன் சொன்னதாகக் குறிப்பிட்டு ஓரிரு வசனங்களை சுமார் பத்து ஆண்டுகளின் பின் (10 செப்ரெம்பர் 97)

'களத்தில்' பத்திரிகையில் வெளியிட்டார். அதில் "இந்த மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இந்த மண்ணை ஆள அருகதை அற்றவர்கள்" என்பதும் ஒன்று.

இதனை எழுதியவர் 'ஈ.பி.டி. பியை நன்றாகச் சாடியிருக்கிறேன்' என்று நினைத்திருப்பார். தேர்தல் திணைக்களத்தில் சைக்கிள் சின்னத்துடன் ஒற்றையாட்சியை ஆதரிக்கும் யாப்பினை சமர்ப்பித்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர்,பின்னாளில் தான் எதிர்க்கும் 13 வது சட்டதிருத்தத்தின் கீழ் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கான முன்னோட்டமாக இந்த வசனத்தைப் பயன்படுத்துவார்கள் என்று அவர் கனவிலும் நினைத்திருக்கமாட்டார்.

"இந்தப் பெண்ணை எனக்கு பிடிக்கவே இல்லை ஆனால் இவளை நீங்கள் எனக்குத் தான் கட்டித்தர வேண்டும் வேறெவருக்கும் கட்டிக் கொடுக்கக்கூடாது" என்று கூறும் பாணியில் திலீபன் நினைவு நாளில் இந்த வசனத்தைக் காட்சிப்படுத்தியமை தேர்தலுக்கான முன்னோட்டமே.

இந்த வசனத்தை கண்ணுற்ற ஒருவர் உடனே அதனைப் படம் எடுத்து லண்டனுக்கு ராஜனிடம் அனுப்பி வைத்தார். அத்துடன் எப்போதாவது, எங்கேயாவது திலீபன் இப்படிச் சொன்னான் அல்லது எழுதினான் என்று தெரியுமா என்று ராஜனிடம் கேட்டார்.

"ஒருபோதும் இல்லை" என்று பதில் கிடைத்தது.

தனது பெயரில் வெளியிட்ட அந்த வசனத்தை உயிரோடு இருந்ததால் தடுக்க முடிந்தது தலைவரால். தான் மறைந்து பத்து வருடங்களின் பின்னர் நாட்டில் தான் ஆசிரியராக இருந்த பத்திரிகையை அதே பெயரில் லண்டனில் வெளியிட்ட புண்ணியவானைப் பற்றியோ, தான் சொல்லாததை சொன்னது போன்ற கற்பனை வார்த்தைகள் அந்தப் பத்திரிகையில் பிரசுரமாகுமென்றோ திலீபன் கனவிலும் நினைத்திருக்க மாட்டான்.

"மலரப்போகும் தமிழீழத்தை வானத்தில் இருந்து பார்ப்பேன்" என்று தான் அவன் உயிரோடு இருக்கும் போது சொன்னான். மற்றும்படி, "இந்த மண்ணின் விடுதலையை நேசிக்காத எவரும் இந்த மண்ணை ஆள அருகதை அற்றவர்கள்" என்ற வார்த்தையைப் பார்த்தால், தலைவர் அன்று கேட்ட கேள்வியைத் தான் திலீபனின் ஆன்மாவும் கேட்கும் "நான் எப்ப இதைச் சொன்னனான்"?

இன்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் அரசியற் குழந்தைகள் திலீபனின் மறைவின் பின் அவனது பெயரில் வெளிவந்த இந்தக் கற்பனைக் கூற்றைச் சுட்டிக்காட்டி ஆதாரம் இருக்கிறது என்று துள்ளிக்குதிக்கிறார்கள். இவர்கள் திலீபன் உண்ணாவிரதம் இருந்த காலத்தில் பிறந்திருந்தார்களோ தெரியாது.

திலீபனை அரசியல் பணிக்கு அனுப்பியவரும், எப்போதும் அவன் கூடவே இருந்த ராஜனும், சமகாலத்தில் தீவுப்பகுதியில் பிரதேசப்பொறுப்பாளராக விளங்கியவரும் 'இப்படித் திலீபன் சொல்லவே இல்லை' எனச் சொன்னாலும் இவர்களின் கட்சி விசுவாசம் உண்மையைத் தரிசிக்க விடாது.

***

2022 ஆம் ஆண்டின் மாவீரர்நாள் வருகிறது. இந்தக் கால கட்டத்தில் மேலே சொன்னதைப்போல தலைவரின் அறிக்கைகள், குறிப்புகள் என்று சொல்லி பலதும் பத்தும் வெளிவரலாம். அதற்குள் தமது கற்பனைகளை இடைச்சொருகலாக நாசூக்காக திணிக்கும் சம்பவங்கள் ஏற்படலாம்.

எனவே தலைவரை உளமார நேசிக்கும் அனைத்து உறவுகளும் இந்த விடயத்தில் மிக மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தான் கற்பனையாக எழுதிய வசனம், திலீபனின் நினைவேந்தல் விடயத்தில் பயன்படுத்தப்பட்ட போது திருடனுக்கு தேள் கொட்டியது போன்று குறிப்பிட்ட புண்ணியவானுக்கு இருந்திருக்கும்.

ஆனாலும் அவர் விசமத்தனமாக மௌனம் சாதித்தார்.

ஆகவே, எவ்வகையிலும் மாவீரர்களையும் இந்த அரசியல் அசிங்கத்துக்குள் தலைவரின் பெயரால் இழுத்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் தலைவர் மாவீரர்நாள் உரையில் தனக்கு பிடிக்காத தமிழ் தரப்பைச் சாடினார் என்ற அர்த்தத்தில் விளங்கிக் கொண்ட "புத்திசாலிகள்" நாட்டில் மட்டுமல்ல லண்டனிலும் இருக்கிறார்கள். அதற்கப்பாலும் இருக்கக் கூடும்.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284



# சிட்னியின் சின்னம்- ஹார்பர் பிரிட்ஜ்

**நெ செ பரத்**

சிறு வயது முதலே பாலங்களைப் பார்த்தால் ஒரு மிரட்சி நம்மை ஆட்கொள்ளும், “ஓடுற தண்ணிக்கு மேல பாலமா ? ” என்று ஆச்சரியக் கேள்விகள் நம் மனதுக்குள் எழும். சில ஊர்களுக்கு பாலங்கள் அடையாளமாக அமைவதுண்டு, அது போன்று சிட்னி நகருக்கு ஒரு அடையாளச் சின்னம் “சிட்னி ஹார்பர் பிரிட்ஜ்”. “பூக்கடைக்கு எதற்கு விளம்பரம்?” என்ற சொற்றொடர் இந்த இடத்தில் மிகப் பொருத்தமாக இருக்கும். பிரமாண்டம் என்ற சொல்லுக்கு மிகச்சிறந்த உதாரணம் இந்த ஹார்பர் பிரிட்ஜ். இந்தப் பாலத்தின் வரலாற்றை அறிய உங்களை நான் அமெரிக்காவின் “ஹெல் பிரிட்ஜ்” நோக்கி கூட்டிச்செல்கிறேன்.

1912-1916 இல் நிறுவப்பட்ட இந்த “ஹெல் பிரிட்ஜ்” நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. கோட் ஹான்கர் (சட்டை தூக்கி) வடிவ வடிவத்தில் அமைந்துள்ள இந்தப் பாலம்தான் , சிட்னி ஹார்பர் பிரிட்ஜ்க்கு ஒரு முன் மாதிரி என்றே சொல்லலாம். அதுமட்டுமல்லாது 1928-இல் இங்கிலாந்தின் நியூகாஸில் நகரில் இது போன்ற வளைவு வடிவப் பாலம் ஒன்று அமைக்கப்பட்டது. அதன் பெயர் “டைன் பிரிட்ஜ்”. அறிவியல் கூறும் உண்மை என்னவென்றால், வளைவு வடிவப் பால அமைப்பு பாரத்தை சமன்படுத்த மிகவும் ஏதுவாக இருக்குமாம்.

சிட்னி ஹார்பர் பிரிட்ஜ்க்கு தொடக்கப்புள்ளி நியூ சவுத் வேல்ஸ் பொதுப்பணித்துறை பொறியாளர் “ஜான் ப்ராட்பீல்ட்” என்பவர் தான். அவர்தான் அரசின் சார்பாக இந்தப் பாலத்தை கட்ட ஆவன செய்தார். பிரிட்டிஷ் நாட்டு கட்டுமான நிறுவனமான “டார்மன் லாங் ரு கோ” இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக தெரிவு செய்யப்பட்டது. இந்த நிறுவனம் தான், நான் முன்னர் கூறிய “டைன்” பாலத்தை கட்டியது. உலகின் எட்டாவது நீளமான சிட்னி ஹார்பர் பிரிட்ஜ் தான் எஃகில் (ஸ்டீல்) கட்டப்பட்ட உலகின் அதி உயரிய வளைவு வடிவப் பாலமாகும். இதன் உயரம் தண்ணீர் மட்டத்தில் இருந்து சுமார் 440 அடி ஆகும். “டாவ்ஸ் பொய்ண்ட்” என்ற இடத்தில இருந்து தொடங்கி , “மில்சன்ஸ் பொய்ண்ட்” வரையில் நீண்டுள்ள இந்தப் பாலத்தின் மேல் 6 வழிச் சாலை உள்ளது. அத்தோடு இரண்டு ரயில் பாதையும், ஒரு பயணியர் நடை பாதையும் மற்றும் ஒரு சைக்கிள் செல்லும் பாதையும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரயில் பாதை வடக்கு கரை (North Shore) ரயில் பாதையின் அங்கமாகும். “வ்ய்ன்யார்ட்” (Wynyard) ரயில் நிலையம் முதல் “மில்சன்ஸ் பொய்ண்ட்” வரையிலான பாதை இந்தப் பாலத்தின் வழியே செல்கிறது. உங்களுக்கும் பாலத்தின் மேல் , ரயில் பயணம் செய்ய ஆசை இருந்தால் மேல்குறிப்பிட்ட ரயில் தடம் வழியே பயணிக்கலாம். நாங்களும் பயணித்தோம், உயரிய பாலத்தின் மேல் பயணிக்கும் அனுபவம் சொல்லிலடங்காதது.

இந்தப் பாலத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்ட அதே காலகட்டத்தில் தான் “சிட்டி சர்க்கிள்” என்று சொல்லப்படும் பாதாள ரயில் பாதை அமைக்கும் பணியும் நடைபெற்றுக்கொண்டு இருந்தது. அதைக் கருத்திற்கொண்டு பாலத்தின் ரயில் பாதை அமைக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. 1923 ஜூலை 28 ஆம் நாள் இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இருபுறங்களில் இருந்தும் ஒரே சமயத்தில் பாலத்தின் கட்டுமான வேலைகள் நடைபெற்று இறுதியாக இருபுற பால அமைப்புகளும் மையப்பகுதியில் இணைக்கப்பட்டன. 1932 ஜனவரி 19-இல் முதன்முறையாக ரயில் சோதனை ஓட்டம் தொடங்கியது, அடுத்த மூன்று வார காலத்துக்கு இந்தச் சோதனை ஓட்டம் நடைபெற்றது. இன்றைய காலத்தோடு ஒப்பிடுகையில் அக்கால கட்டுமான பாதுகாப்பு விதிமுறைகள் மிகவும் தளர்ந்து இருந்தன என்றே சொல்லலாம். அதன் விளைவாக இந்தப் பாலத்தை நிர்மாணிக்கும் போது, 16 கட்டுமானத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. “ஹென்றி மல்லார்ட்” என்ற புகைப்பட கலைஞர் 1930 முதல் 1932 வரையில் நடந்த கட்டுமானப் பணிகளின் சவால்களை புகைப்படங்களாக எடுத்துள்ளார். சுமார் எட்டு வருட காலங்களாக கட்டப்பட்ட இந்த ஹார்பர் பிரிட்ஜை அமைக்க, ஒட்டுமொத்த பொருட்செலவு அன்றைய மதிப்பில் சுமார் 6.25 மில்லியன் ஆஸ்திரேலியா பவுண்டுகளாகும். 1932 மார்ச் மாதம் 19-ஆம் திகதி ஹார்பர் பிரிட்ஜ் திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழாவில் ஒரு சுவாரசிய சர்ச்சை நிகழ்ந்தது. நியூ சவுத் வேல்ஸ் பிரீமியர் “ஜாக் லாங்” ரிபன் வெட்டி பாலத்தை திறந்து வைக்கும் முன்னர், இராணுவ உடையில் குதிரை மேல் வந்த ஒரு நபர் தன் கையிலிருந்த வாளால் அந்த ரிபனை வெட்டினார். இந்த சம்பவம் அங்கு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தக் குற்றத்துக்காக அந்த நபர் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் மீண்டும் அந்த ரிபன் கட்டப்பட்டு பிரீமியர் ஜாக் லாங் ஹார்பர் பிரிட்ஜை அதிகாரபூர்வமாக திறந்து வைத்தார். இந்த பாலத்தை அமைக்க ஆவன செய்த ஜான் ப்ராட்பீல்டை கௌரவிக்கும் வகையில் பாலத்தில் மேல் உள்ள சாலைக்கு ப்ராட்பீல்ட் நெடுஞ்சாலை எனப் பெயரிடப்பட்டது. இந்தத் திறப்பு விழாவில் சுமார் ஒரு மில்லியன் வரையிலான மக்கள் கலந்து கொண்டனரெனக் குறிப்பு இருக்கிறது. அன்றைய காலகட்டத்தில் சிட்னி நகரின் ஒட்டுமொத்த மக்கள் தொகையே 1.25 மில்லியன் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்று ஹார்பர் பிரிட்ஜை சிறப்பிக்கும் வகையில் மூன்று தபால் தலைகளும் வெளியிடப்பட்டன. அன்றைய காலகட்டத்தில் நிலவிய “Great Depression” என்னும் 10 ஆண்டு கால உலகளாவிய நிதி நெருக்கடி நேரத்தில், இந்த பாலத்தை கட்டிமுடித்தது ஒரு மாபெரும் சாதனையாகும். அதன் மூலம் அன்றைய தொழிலாளர்களின் வாழ்வாதாரமும் காக்கப்பட்டது. இதனால் தான் சிட்னி ஹார்பருக்கு “அயர்ன் லங்” (Iron Lung) என்ற செல்லப்பெயரும் உண்டு. சுமார் 90 வருட காலங்களாக பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை கடந்து வந்த இந்த சிட்னி ஹார்பர் பிரிட்ஜ் இன்றளவும் சிட்னியின் அடையாளமாக விண்ணோக்கி கம்பீரமாக நிற்கிறது. இதன் மொத்த எடை 52,800 தொன் என நண்பர் ஒருவர் சொன்னார்

சிட்னி மக்களின் வாழ்வோடு ஒன்றிப்போன ஹார்பர் பிரிட்ஜ் ரயில் பயணத்தில் ஒரு புறம் கடலும் மறுபுறம் ஒபரா ஹவுசும் என்ற கண்கொள்ளாக் காட்சியோடு நாம் விடைபெற்றோம்.

**(பயணங்கள் முடிவதில்லை)**

# கோபமெனும் பொல்லாப் பெருந்தீ!

**மனிதர்கள் எல்லோருக்குமே கோபம் என்ற உணர்வு வராமல் இருக்காது. அப்படி அடிக்கடி மனிதர்களால் வெளிப்படுத்தப்படும் கோபம் தான், உலகில் பல பிரச்சினைகளுக்கு, முக்கியமாக யுத்தங்களுக்கு வித்திடுகின்றது. கோபமென்ற உணர்வை இயல்பான ஒன்றாக நினைத்து சாதாரணமாகக் கடந்துவிட முடியாது. ஏனெனில் உளநோய்கள் பலவற்றுக்கும் கோபமே முன்னறிகுறியாகவும் கொள்ளப்படுகின்றது. அப்படிப்பட்ட கோபத்தை எப்படித் தவிர்க்கலாம், கோபத்தால் உண்டாகும் விளைவுகள் யாவை என்பன பற்றி எதிரொலி வாசகர்களுக்காக விரிவாக எடுத்துரைக்கிறார் மனோதத்துவ நிபுணர் ரைஸ்.**




கோபம் என்பது என்ன? அது ஒரு உணர்வு , ஆற்றல். அது பெரும்பாலும் அழிக்கும் ஆற்றலாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் அறச்சீற்றம் என்பதும் கோபம் தான், அது சமுதாயத்தில் நடக்கும் தவறுகளைப் பார்த்து வருவது. அதனால் தான் பாரதியார் கூட 'ரௌத்திரம் பழகு' என்கிறார்.

ஆனால் சினம் எனும் கோபம் அடுத்தவர்களை தாக்க எறியப்படும் ஆயுதமானாலும் அது எய்தவனையே அதிகம் தாக்குகிறது. அதைத் தான் திருவள்ளுவர் சொல்கிறார்,

'தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால் தன்னையே கொல்லுஞ் சினம்'

அதாவது,

ஒருவன் தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டுமானால், சினத்தைக் கைவிட வேண்டும் இல்லையேல் சினம், அவனை அழித்துவிடும்

சில பேர் சினத்தை மற்றவர்களிடம் காட்ட விரும்பாவிட்டாலும் அதை தம்மை நோக்கிச் செலுத்தி, தம்மையே காயப்படுத்திக் கொள்வர். உதாரணமாக சங்க காலத்து புலவர் சீத்தலை சாத்தனாரைச் சொல்லலாம். அவர் பிற நூல்களில் ஏதாவது பிழைகள் காணப்பட்டால், அந்தப் பிழைகளை ஏற்படுத்தியோரை குற்றம் கூறுவதற்கு பதிலாக 'இந்தப் பிழைகளைக் கேட்கும்படி நேரிட்டதே' என்று வருந்தித் தமது தலையை தானேக் குத்திக் கொள்வாராம். அதனால் அவரது தலை புண்பட்டுச் சீழோடிருந்தமையால் சீத்தலைச் சாத்தனார் என்று அழைக்கப்பட்டாராம்.

தன் மீதே திருப்பிவிடப்படும் கோபம் தான் தற்கொலை என மனநல இலக்கியத்தில் கூறப்படுகிறது.

கோபம் எதனால் ஏற்படுகிறது? கோபம் என்பது ஒரு மனிதனின் பதற்றம் மற்றும் இயலாமையின் வெளிப்பாடு தான். பெரும்பாலும் கோபம் அப்படி இயலாமையில் ஏற்பட்டாலும் சில மனநோய்களிலும் கோபம் ஒரு முக்கியமான அறிகுறியாக இருக்கிறது. பொதுவாக ஆளுமைக் கோளாறு கொண்டவர்களின் மனநிலையில் ஏற்படும் சடுதியான மாறுதல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாத நிலை போன்ற காரணங்களால் கோபம் ஏற்படுகிறது. மனஅழுத்தம் இருப்பவர்களுக்கும் பதற்ற நோய் இருப்பவர்களுக்கும் பருத்திக் கொட்டையிலிருந்து பட்டென பஞ்சு வெடிப்பது போல கோபம் வெளிப்படும். அது போல இருமுனைப் பிறழ்வு நோய் இருப்பவர்களுக்கு மனவெழுச்சி இருக்கும் போது கோபம் தான் ஒரு முக்கியமான அறிகுறியாக இருக்கிறது. மனச்சிதைவு நோய் இருப்பவர்களுக்கு மாயக்குரல் கேட்பதாலோ, மாய எண்ணத்தினாலோ கோபம் வரலாம். அவர்கள் ஏன் கோபப்படுகிறார்கள் என மற்றவர்களுக்குப் புரியாமல் இருக்கலாம். அது போலத் தான் மனவளர்ச்சி குன்றியோரும் 'டிமன்ஷியா' எனும் மறதி நோய் உள்ளவர்களுக்கும் இயலாமையாலும் உணர்ச்சியை வெளிப்படுத்த தெரியாததாலும் கோபம் வரலாம்.

### கோபத்தைக் கட்டுப்படுத்தும் வழிகள் என்னென்ன?

முதலில் கோபம் என்பது மற்ற உணர்ச்சிகள் போல ஒரு உணர்ச்சி தான் என்பதை புரிந்துக் கொள்ள வேண்டும். எப்படி சிரிப்பு வந்தாலும் நாகரிகம் கருதி சில இடங்களில் சிரிப்பை அடக்கிக் கொள்கிறோமோ அது போல கோபத்தையும் அடக்க முயற்சிக்கலாம். எதையும் சொல்லும் முன்னும் ,ஒரு சில நொடிகள் என்ன சொல்லப் போகிறோம்?,எதனால் அதை சொல்லப் போகிறோம்? என யோசிக்கலாம்.

யோசிக்கக் கிடைத்த அந்த சில நொடிகள் முடிந்தவுடன் தான் சொல்ல வந்ததை மிகத் தெளிவாக மற்றவருக்கு புரியும் படி எப்படி சொல்லலாம் என யோசிக்கலாம். சுற்றி வளைத்துப் பேசாமல் நேரடியாகச் சொல்ல வந்ததை மற்றவரின் மனம் புண்படாதவாறு சொல்லலாம்.

சொல்ல வந்ததை அந்தச் சூழ்நிலையில் நிதானமாக, தெளிவாகச் சொல்ல முடியாது என நினைக்கும் பட்சத்தில் அந்த இடத்தை விட்டு வெளியேறி ஒரு சிறு நடை போட்டு விட்டு வரலாம்.

இன்னும் சொல்லப் போனால், சில சமயங்களில், சொல்ல வந்ததை உடனே சொல்ல வேண்டுமென அவசியமில்லை. இன்னும் சற்று நேரம் எடுத்து, சிந்தித்து அல்லது தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதிப் பார்த்து, அதைப் பயிற்சி செய்து பின் சொல்லலாம்.

கோபப்படுத்திய விடயத்தை மறந்து, அதற்கு காரணமாக இருந்த பிரச்சினைக்கு ஏதாவது மாற்று வழி இருக்கிறதா என யோசிக்கலாம். உங்களால் எதனை மாற்ற முடியும் எதனை மாற்ற முடியாது எனும் உண்மை நிலையை ஆராய்ந்து உணர முயற்சிக்கலாம். கோபம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பதிலாக அதிகப்படுத்தும் என்பதை மனதுக்குள் சொல்லிப் பார்த்துக் கொள்ளலாம்.

நமது கோபத்துக்கு நமது செயலுக்கு மற்றவர் மீது பழி போடுவதை விடுத்து முதலில் நம் செயலுக்கோ கோபத்துக்கோ நாம் பொறுப்பெடுத்து பழக வேண்டும். உதாரணமாக அலுவலகத்துக்கு தினம் நேரம் கழித்து போவதால் கடிந்துகொண்ட முகாமையாளர் மீது கோபப்படுவதை விடுத்து முதலில் உங்கள் செயலுக்கு பொறுப்பெடுத்தால் கோபத்தின் வீச்சு குறையும், தீர்வு பிறக்கும்.

கோபம் நம்மை நாமே காயப்படுத்தும் செயல் என நாம் அறிவோம். கோபப்படுவதால் நமது உடலில் 'கார்டிசால்' எனும் இரசாயனம் அதிகம் சுரந்து உடல் உறுப்புகளைக் காயப்படுத்துகிறது. பலருக்கு கோபம் இரத்த அழுத்தத்தை அதிகரிக்கிறது. அதனால் நம்மை அழிக்கும் கோபத்தை விட்டு, மற்றவருக்கு விட்டுக் கொடுப்பதும் அவர்களை மன்னிப்பதும் தான் நமக்கு நல்லது அப்படித் தானே? அது உறவையும் மேம்படுத்துமல்லவா?

**(22ஆம் பக்கம் பார்க்க)**






(தமிழகத் தம்பி வாய்க்குள் ஏதோ பாட்டை முணுமுணுத்தபடி விசிலடித்துக் கொண்டு இருக்கின்றார்.. )

**ஈழத்து அண்ணன்:** என்ன தம்பி இண்டைக்கு வலு புளுகமா இருக்கிறீர்? என்ன விஷயம்?

**தமிழகத் தம்பி :** நாளைக்கு அடிலெய்டு போறேன் மேட்ச் பார்க்க! அண்ணே அந்த கிரௌண்ட்ல மேட்ச் நடக்கும் போது அத்தின மக்கள், அத்தின சத்தம் மத்தியில இருந்து பார்க்கிறது பயங்கர த்ரில்லிங்கா இருக்கும்ணே !

**ஈழத்து அண்ணன்:** என்னத்த கண்டறியாத த்ரில்லிங்கோ? நான் ஒரே ஒருக்கால் போயிருக்கிறன்.. எடக்கடவுளே ஒரு நாசமும் விளங்குதில்லை ...

**தமிழகத் தம்பி :** அப்போ உங்களுக்கு கிரிக்கட் புரியலன்னு சொல்லுங்க..

**ஈழத்து அண்ணன்:** விசர்க்கதை கதையாத .. அப்ப சென்ட்ரல் கொலிஜ்க்கு த்ரீ டௌன் பட்ஸ்மன் நான் தான். விளங்கேல்ல எண்டு சொன்னது.. எல்லாம் சரியான தூரமா இருக்கிறதால ப்ளேயர்ஸ் எல்லாம் சின்னனா எல்லே தெரியுது! யார் பீல்டர் , யார் பட்ஸ்மன் ஒண்டும் அவ்வளவு தெளிவாத் தெரியாது.

**தமிழகத் தம்பி :** அதுக்கு தான் ஜெயான்ட் ஸ்க்ரீன் இருக்கே! அதைப் பாருங்க!

**ஈழத்து அண்ணன்:** உது நல்ல கதையாக் கிடக்குது! அப்பிடியெண்டா நான் வீட்டை இருந்தே என்ர ரீவியில் பார்ப்பனே !! எதுக்கு கொரோனா இன்னும் முடிய முதல்ல ரிஸ்க் எடுத்து, காசு குடுத்து கிரௌண்ட்க்கு போக வேணும் ?

**தமிழகத் தம்பி :** அடடா.. இவருக்கு எப்பிடி புரியவைக்கிறது? அண்ணே கிரௌண்ட்ல நிக்கும் போது எல்லோரும் ஒற்றுமையா ஒரு அணிக்கு சப்போர்ட் பண்ணும் போது வரும் பாருங்க ஒரு பீல் ... அதெல்லாம் உணர்ந்தா தான் அண்ணே புரியும்! சிட்னி ஸ்ரீலங்கா மேட்ச்சுக்கு நீங்க மட்டும போயிருந்தீங்கன்னு வச்சுக்கோங்க ஸ்ரீலங்கா கண்டிப்பா ஜெயிச்சிருக்கும்..

**ஈழத்து அண்ணன்:** நல்ல காலம் நான் போகேல்ல.. எனக்கு கண்ணில காட்டாக்கூடாத ரீம் ஸ்ரீலங்கா தான்.

**தமிழகத் தம்பி :** என்னாண்ணே அந்த நாட்டிலேர்ந்து வந்திட்டு அந்த நாட்டு டீமுக்கே சப்போர்ட் பண்ண மாட்டேங்கிறீங்க...

**ஈழத்து அண்ணன்:** அதெல்லாம் அப்பிடித்தான். ஏன் எங்களுக்கு பிடிச்ச ரீமுக்கு நாங்கள் சப்போர்ட் பண்ணக்கூடாதோ?கண்டிப்பா நாங்கள் எந்த நாட்டில இருந்து வந்தமோ அதுக்கு தான் சப்போர்ட் பண்ண வேணுமோ ?

**தமிழகத் தம்பி :** அட இல்லண்ணே.. நாம ஆஸ்திரேலியால இருக்கோம்.. நம்ம விருப்பு வெறுப்பு சுதந்திரத்துக்கு மதிப்பு குடுக்கிற ஊருண்ணே இது.. ஆஸ்திரேலியால நடக்கிற ஆஸ்திரேலியா -இந்தியா மேட்ச்ல இந்தியாக்கு ரசிகர்கள் எக்கச்சக்கமா சப்போர்ட் பண்றத எந்தவிதமான கோபமோ பொறாமையோ இல்லாம பார்த்து ரசிக்கிற ஜனங்க வாழுற நாடுண்ணே இது.

**ஈழத்து அண்ணன்:** என்ர மகன் இப்ப கிட்டடியில இலங்கை கிரிக்கட் ரீமுக்கு சப்போர்ட் பண்ணப்போறன் எண்டு ஒரு ஸ்ரீலங்கா கிரிக்கட் ஜேர்சிய தூக்கிக் கொண்டு வந்து நிண்டான். நல்ல பேச்சுக் குடுத்தன்.

**தமிழகத் தம்பி :** அது தப்புண்ணே.. நம்மளோட அடையாளமா இருக்கிற பூர்வீக நாடு. நான் என் பையன் கிட்ட நீ இந்தியாக்கு தான் சப்போர்ட் பண்ணனும். ஆஸ்திரேலியாக்கு கெடையாதுன்னு ரொம்ப ஸ்டிரிக்டா சொல்லிவச்சிருக்கிறன்.

**ஈழத்து அண்ணன்:** கொஞ்சம் பொறு ,கொஞ்சம் பொறு ! இவ்வளவு நேரமும் சுதந்திரம் அது இதெண்டு சொல்லீட்டு இப்ப நீ செய்யிறது என்னவாம்??

**தமிழகத் தம்பி :** அது வந்துண்ணே....

**ஈழத்து அண்ணன்:** ஸ்ரீலங்காக்கு சப்போர்ட் பண்ணக்கூடாது எண்டு நான் சொல்ற மாதிரி நீ அவங்கள் பிறந்த நாடு ஒஸ்ரேலியாக்கு சப்போர்ட் பண்ணக்கூடாது.. இந்தியா தான் எண்டு திணிக்கிறதும் பச்சைப் பிழை தானே?? என்ன தம்பி கதையைக் காணேல்ல.. எங்கட விருப்பு வெறுப்பை பிள்ளையளில திணிக்க வேண்டாம்....




பெடியனும் கடியனும்

# விக்டோரியாவில் சட்ட உதவிபுரியும் அமைப்புகள்

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயிற்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.




**கேள்வி: அவுஸ்திரேலிய விக்டோரியா மாநிலத்தில் சட்டஉதவி பெற்று நாம் நீதி பெறுவதற்கு அணுக வேண்டிய நிறுவனங்கள் எவை?**

**பதில்:** இரண்டு அமைப்புகளைச் சொல்ல முடியும்.

**1. விக்டோரிய மாநில சட்டஉதவி – Victoria Legal Aid – (VLA)**

VLA என்பது அரசால் நிதி வழங்கப்பட்டு இலவச சட்ட ஆலோசனைகளையும் தகவல்களையும் வழங்கும் அரச நிறுவனம் ஆகும்.

இந்த நிறுவனம் குற்றவியல், குடும்ப, சமூக நலன் (Centrelink), குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் இன்னோரன்ன சட்டப்பிணக்குள் சம்பந்தமான விடயங்களுக்கு நிதி உதவி வழங்கும்.

பொதுவாக பொதுநலன் விரும்பிகளால் இந்தச்சட்ட உதவி நிறுவனம் ஆஸ்திரேலிய அரசால் ஓரளவுக்குத் தான் கவனிக்கப்படுகின்றது என கண்டனத்துக்குள்ளாகி வருகிறது.

பெரும்பாலான குற்றவியல் (Criminal) வழக்குகளில் சம்பந்தப்படடவர்கள் இந்நிறுவனத்திடம் உதவிபெற முடியாமல் இருப்பதாக பொதுவான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

பொதுவாக VLA மனநோயாளிகள், வறுமையால் பாதிக்கப்பட்டோர், வதிவிடம் அற்றோர் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கும்.

VLA ஆனது சிறிய குற்றவியல் வழக்குகளில் சம்பந்தப்பட்டோருக்கு தகவல்களை வழங்கி, அவர்கள் நீதிமன்றில் தம்மைத் தாமே பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உதவி செய்கின்றது.

மேலும் VLA ஆனது இலவசமாக அடிப்படை சட்ட ஆலோசனைகளை சிறிய குற்றம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டோருக்கு நேரடியாகவோ அன்றி தொலைபேசி வழியாகவோ வழங்கி வருகின்றது.

வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்டோருக்கு அவர்களின் சொத்துக்கள் (Assets), வருமானம் (Income) என்பவற்றினைக் கருத்தில் கொண்டு அவர்கள் தகுதிபெறின் உதவி வழங்கும் அமைப்பாகவும் இது செயற்படுகின்றது.

மேலும் குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் அந்தக்குற்றத்துக்கு குற்றவாளியாகக் காணப்பட்டு சிறை செல்வார் எனின், அவருக்கு பொதுவாக VLA உதவி வழங்கும்.

மேலும் VLA சில சந்தர்ப்பங்களில் குற்றம் சாட்டப்பட்டவரின் பகுதிச் செலவினை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டும்.

நீதிவான் நீதிமன்றில் (Magistratic Coruts) சில சமயங்களில் சட்டத்தரணி ஒருவரே கடமையில் இருப்பார். வருமானம் குறைந்தவர்களுக்கு கடமையில் இருக்கும் (Duty Lawyer) இந்தச் சட்டத்தரணி உதவி வழங்குவார்.

**2. விக்டோரிய சமூக சட்ட மையங்கள் Victoria Community Legal Centres (CLC'S)**

இவ்வாறு அழைக்கப்படும் நிறுவனங்களும் விக்டோரியாவில் நிதி குறைந்தவர்கள் நீதி பெறுவதற்கு உதவி புரியும்.

இந்நிறுவனங்கள் பொதுநலன் விரும்பும் சட்டத்தரணிகளாலும் சட்ட மாணவர்களாலும் (Law Students) பணியேற்று நடைமுறையில் இயங்குவன.

மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் பெரிய அளவில் வருமானம் அற்ற அல்லது வருமானம் குறைந்த பொது மக்களுக்கு உதவிபுரியாவிட்டாலும் ஓரளவுக்கு உதவி வழங்கி வருகின்றன என்பது உண்மையாகும்.

**ஊழிக்காலம்-2**
**38**



# புயலுக்குப்பின்...



பிள்ளைகள் சமையலுக்காக ஓடினார்கள், பார்வதியால் உடனே சாப்பிட முடிய வில்லை. காரணம் படிவங்கள் அனைத்தையும் ஆங்கிலத்தில் நிரப்பும் படி கேட்டிருந்தார்கள். பிள்ளைகள் படிவத்துடன் அவளை மொய்த்துக் கொண்டனர். பொறுமையாக நிரப்பிக் கொடுத்துவிட்டு சாப்பிட அமர்ந்தபோது, மணி மாலை நான்கு. சாப்பிட்டபின் நேராக தொலைக்காட்சிக் கொட்டிலுக்குப் போனாள்.

இரவு நெடுநேரம் கழித்தே உறங்கினாலும், முகாமின் வடதிசைக் கொட்டில் ஒன்றிலிருந்து எழுந்த கதறலும், ஆரவா-ரமும் அவளை அதிகாலையிலேயே எழுப்பிவிட்டது.

“மம்மீ சுஜாவுக்கு வருத்தம் வாங்கோ..” என்று ஓடிவந்தாள் மாலா.

“ போய் லீடரிட்ட சொல்லுங்கோ, ஏன் என்ர நித்திரைய கெடுக்கிறீங்கள்?” என அவர்களை விரட்டி விட்டாலும் - பார்வதி மனம் கேளாமல் எழுந்து போனாள்.

ஆறேழு பெண்கள் சேர்ந்து ஒரு பெண்ணை, இடுப்புவரை உயர்த்தி தாங்கிக் கொண்டிருந்தார்கள். தலை தடவ ஒருத்தி, கழுத்தை தடவ ஒருத்தி, கண்ணீர் துடைக்க ஒருத்தி, கால்களை அமுக்க இருவர் என பரபரப்பாக இருந்தனர்.

லீடர் கவிதா அப்போதுதான் குடிலுக்கு வந்தாள். அந்தப் பெண்ணோ சினிமாவில் ஆவியால் பீடிக்கப்பட்டவர்கள் நடந்து கொள்வதுபோல உடலை முறுக்கிக் கொண்டு பலவிதமான நெளிவுடன், “ அய்யோ, அக்கா, இழுக்குதடி. குத்துதடி.” என்று கூச்சல் போட்டுக் கொண்டிருந்தாள்.

பார்வதி அவள் நாடியை பிடித்துப் பார்த்தாள். நாடி பிரச்சினையில்லை கழுத்துப் பகுதியை தடவிப் பார்த்தாள். நரம்பு சுழுக்கியிருந்தது.

“பிள்ளையள் பனடோல் இருந்தா தாங்கோ” - ஒரு கார்ட் பனடோலில் இரண்டை உடைத்து தண்ணீர்ப் போத்தலையும் கொடுத்து அவளை போடச் செய்தாள்.

“அவளை கீழ படுக்க விடுங்கோ. கொஞ்சம் தள்ளி நில்லுங்கோ..” பார்வதி கட்டளை இட்டாள்.

அவள் கீழேபடுக்க சிரமப்பட்டது போல காட்டிக் கொண்டாலும் படுத்தாள். அவளைவிட அவளைத் தாங்கிக் கொண்டிருந்தோரே மிகவும் பரபரப்பாக இருந்தனர். கோடாலித் தைலத்தை இலக்கில்லாமல் பூசியிருந்தார்கள். எனினும் தேவையான இடத்தில் மசாஜ் செய்யவில்லை என்பதை நரம்பின் புடைப்பு தெரிவித்தது.

பார்வதி உள்ளங்கையில் தைலத்தை எடுத்து புடைப்பு கண்ட இடத்தில் மசாஜ் செய்தாள். தலையணையைத் தூக்கி அப்பால் போட்டாள்.

அவள் இப்போது அமைதியாகப் படுத்திருந்தாள், கவிதா மெதுவாகப் பார்வதியிடம் “ஒண்டும் பிரச்சினை யில்லையே..” கேட்டாள்.

“ச்சா, சுளுக்குக்கு ஆஸ்பத்திரிக்குப் போனா சிரிக்கமாட்டாங்களே.” என்றாள்.

நிலம் வெளித்துவிட்டது. “ இனி எங்க படுக்கிறது ? போய் பாயை சுருட்டி வைக்க வேண்டியதுதான்.” என்றபடி பார்வதி தன் குடிலை நோக்கி நடந்தாள். கூடவே வந்த கவிதா “ அன்ரீ உங்கட நித்திரைதான் பழுதாப்போச்சு” என்றாள்.

“ச்சா, நான் எழும்பிற நேரம்தான் முழிச்சிட்டன். சும்மாதான் கிடந்தன். அப்பதான் வந்தவை..” என்றாள் பார்வதி.

காலையில் ரோல் கோலிங் முடிய விடுதலையாகிப்போகும் பிள்ளைகள் இருவர் ஆளுக்கு நூறு ரூபாவை கொண்டு வந்து பார்வதியிடம் கொடுத்தனர்.

“மம்மீ, பிள்ளையாருக்கு நேர்த்தி வைச்சனாங்கள். நாளைக்குத்தானே பூசை, நாங்கள் போயிருவம் - இதை வைச்சு பூசைக்கு ஏதும் வாங்குங்க”

“ஓ.. தாங்கோ” என அதை வாங்கியவள், முன்னர் சேர்ந்த பணத்துடன் சேர்த்து கோவிலுக்கு பொருட்கள் வாங்க கொடுத்துவிட்டாள்.

தொடர்ந்து பிரம்ம குமாரிகளின் தியான வகுப்பு தொடங்கவிருந்தது. அவர்களுக்கு இரண்டாம் புளொக்கின் பின்புறக் கொட்டில் ஒதுக்கப்பட்டிருந்தது. வாரம் ஒருதடவை அவர்கள் வந்தாலும் வகுப்புக்கு பத்துப் பன்னிரெண்டு பேர்தான் தாங்களாகவே சமுகமளிப்பர். மேலும் சிலரை அதட்டி வெருட்டி பார்வதி கூட்டிச்செல்வாள். ஆனாலும் அவர்களுக்கு இதில் ஈடுபாடிருக்காது.

பார்வதிக்கு தியானத்தில் அமர்ந்த போது மீண்டும் நேற்று வந்த அதேயுணர்வு வந்தது. போதைப் பொருள் பாவித்தபின் இப்படித்தான் மயங்குவார்களோ?அவளுடைய தலைக்குள் எதுவோ நீலநிறத்தில் அலைஅலையாக பாய்வது போல ஒரு கணம் இருந்தது. பின் மயக்கம் வருவது போல கண்களை திறக்க மனமில்லையா..? முடியவில்லையா..? அவளுக்குத் தெரிய வில்லை. பிரயாசைப்பட்டே இந்த மயக்க நிலையை உதறினாள். “தியானத்தின் போது உங்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளைக் கூறுங்கள், ஒவ்வொருவராக” என முன் வரிசையிலிருந்து ஒரு பெண்ணை எழுப்பினார் பிரம்மகுமாரி சமாஜத்துப் பெண். அவள் எழுந்து நின்றாள், எதுவும் பேசவில்லை. ‘இதன்போது எதுவும் தோன்றவில்லை’ என்றாள்.

ஒவ்வொருவரும் அவ்வாறே ஊமையாக எழுந்து நின்றனர்.

பார்வதியின் முறை வந்தபோது அவள் தனக்கு இன்றல்ல நேற்றும் ஏற்பட்ட உணர்வை விபரித்தாள். “ஏன்..ஏப்படி?” என்றபோது “தியானத்தில் இப்படியான அற்புதக் காட்சிகள் சிலருக்கு வாய்ப்பதுண்டு” என்றார்கள்.

‘மண்ணாங்கட்டி, இது ஏதோ மூளைச் சலவை. என் உள்ளுணர்வுகளை மடக்கி என்னை மயங்க வைக்கிறது. அல்லது.. எனக்கு பித்தம் முத்திவிட்டது அவ்வளவுதான்’ பார்வதி தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

வன்மமாக அன்று ஒரு கோழியை சமையல் கூடத்திலிருந்து வாங்கினாள்.தனது சமையல் குழுவிடம் கொடுத்து கறிவைக்கச் சொன்னாள். கூடமாட ஒத்தாசையாக சமையலில் உதவப்போனாள்.

“அட இருக்கிறவை காணாம நீங்க சமைக்கப் போறீங்களா..” என்று சந்திரா மறுத்துவிட்டாள். பார்வதி தன் குடிலுக்கு வந்து வாளிகளை எடுத்துக் கொண்டு தண்ணீர் தாங்கிக்கு வந்தாள்.

“ஆர் பிள்ளை கிச்சின்காறர்? தண்ணீர் தாங்கோ குளிக்கப்போறன்.” என்றாள். மாலா ஓடிவந்தாள். வாளிகளைப் பெற்றவள் அதில் நீரை நிரப்பி பக்கத்திலேயே இருந்து குளிக்கும் மறைப்புக்கள் கொண்டு வந்து கொடுத்தாள்.

பார்வதி குளித்தபின் கோழிக்கறியுடன் சாப்பிட்டாள். அப்படியே படம் பார்க்க உட்கார்ந்தாள். ஆர்யா, மாதவன், பாவனா நடித்த படம், பரவாயில்லை.

“அம்மம்மா. ஞாயிற்றுக்கிழமை போட நிகழ்ச்சி பழகினாங்கள்” என வந்து நின்றாள்ஒருத்தி.

“ என்ன நிகழ்ச்சி..?”

“நாடகம் ஒண்டு, டான்ஸ் ஒண்டு” பார்வதி அவளுடன் புறப்பட மேலும் சிலர் கூடிப் போயினர்.

“நாடகத்தை முதல் போடுங்கோ” என்றாள் பார்வதி

முதல் காட்சிக்குரிய பாத்திரதாரி வந்து முன்னே நின்றாள், மற்றவள் வெட்கப்பட்டாள். “ஏனப்பா வாரும்.. உப்பிடித்தான் அங்கயும் செய்யப்போறீரா..?” என்றனர் மற்றவர்கள்.

“நான் அங்க செய்வன்! மம்மிக்கு முன்னால..”

“ஏன்ரியப்பா.. நான் நிண்டா என்ன? நான் நிப்பன்தானே..”

“நீங்க எப்பிடிப்பட்ட நடிப்பு.. உங்களுக்கு முன்னால நாங்கள்..?”

“ப்பூ..” என்ற பார்வதி

“அருக்குவிடாம வாரும் அரங்கத்துக்க” என்று அதட்டினாள். அவள் அருமையாக நடித்தாள். புனர்வாழ்வு முகாமின் அன்றாடப் பிரச்சினைகளைப் பேசியது நாடகம். பார்வதி சில இடங்களில் திருத்தினாள். “ஆரப்பா கதாசிரியர்.. திறமான பிரதி” என்றாள் பார்வதி.

“மம்மி முதல் உத எங்கட ரெயினிங் பேசில போட்டது. அதை அப்படியே இங்கத்தைக்க மாத்தியிருக்கிறன்.”

“மோட்டுச் சிங்களவனுக்கு தமிழ் விளங்காதேடி சும்மா வாய் பாப்பான்.” என்றாள் பார்வதி. என்றாலும் அந்த நிகழ்ச்சி ஞாயிறன்று நடைபெறவில்லை. அது புதன் கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்று நல்ல மழை, இரவு வரை தொடர்ந்தது.

அதிகாலையிலேயே பார்வதி தியானத்தில் அமர்ந்திருந்தாள். சற்று நேரத்தில் அவளுடைய குடிலின் முன் ரோல் கோலிங் நடக்கும் மைதானத்தில் கலகலவென பேச்சுக் குரல்கள் காதை நிறைத்தன. பார்வதி எழுந்து வெளியே வந்தாள்.

(இன்னும் வரும்)

# கோபமெனும் பொல்லாப் பெருந்தீ!

**(20ஆம் பக்கத் தொடர்ச்சி)**

கோபத்தை சில நேரங்களில் நகைச்சுவையாக மாற்றி வெளிப்படுத்தலாம். புரிய வேண்டியவர்களுக்கு புரிந்த மாதிரியும் இருக்கும், மனக்காயம் ஏதும் ஏற்படாமலும் இருக்கும். சார்லி சப்ளின் போன்ற நகைச்சுவை கலைஞர்கள் / பாசிசத்தின் மீது உள்ள கோபத்தை நகைச்சுவை மூலமே வெளிப்படுத்தினர். இன்றைய காலத்தில் பல மீம்ஸ் வகை நகைச்சுவைகள் இந்த வகையைச் சார்ந்தவை என சொல்லலாம். ஆனால் உருவக் கேலி செய்வதையோ எள்ளல் வகையில் கிண்டல் செய்வதையோ தவிர்க்க வேண்டும். அது பகையை அதிகரிக்கும்.

கோபம் வரும் போது சில பேருக்கு இசை கேட்பதோ, தியானம் செய்வதோ, ‘நான் அமைதியை விரும்புகிறேன்’ எனத் திரும்ப திரும்ப மனதுக்குள் சொல்வதோ, முறையான மூச்சுப் பயிற்சி செய்வதோ உதவும். சில பேருக்கு தமது எண்ணங்களை ஒரு டயரியில் எழுதுவதால் கோபம் குறையலாம். பொதுவாக உடல் நலத்தை பேணி, தூக்கத்தையும் பேணி, தினமும் தேவையான அளவு உடற்பயிற்சியும் செய்து ஆரோக்கியமான உணவு உண்டு வந்தாலும் நல்லது தான்.

கோபம் என்பது சில பேருக்கு கட்டுக்கடங்கா வெள்ளம் போல அல்லது ஒரு எரிமலை போல வெளிப்படும். தங்களால் கட்டுப்படுத்த முடியவில்லை எனும் பட்சத்திலும் கோபத்தால் தனது அமைதியும் சுற்றி இருப்பவர்களின் அமைதியும் கெடுகிறது எனும் பட்சத்திலும் உதவியை நாடுங்கள். கோபம் என்பது எல்லா உணர்ச்சிகளையும் போல ஒரு உணர்ச்சி தான். அதை நல்ல முறையில் மடைமாற்றி அமைதியடைய எல்லோராலும் முடியும் எனும் உண்மையை நம்புவோம் .


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

Transco™ CARGO

# ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்




## Christmas Shipping Schedule

| CUT OFF | | EST ARIVAL IN SL | CUT OFF | | EST ARIVAL IN SL |
|---|---|---|---|---|---|
| August | 06 | Sep 13 | August | 20 | Sep 27 |
| August | 13 | Sep 20 * | August | 27 | Oct 04 |
| September | 03 | Oct 11 | September | 17 | Oct 25 |
| September | 10 | Oct 18 * | September | 24 | Nov 01 |
| October | 01 | Nov 08 | October | 22 | Nov 29 * |
| October | 08 | Nov 15 * | October | 29 | Dec 06 * |
| October | 15 | Nov 22 | | | |
| November | 05 | Dec 13 | November | 19 | Dec 27 |
| November | 12 | Dec 20 * | November | 26 | Jan 03 * |
| December | 03 | Jan 10 | December | 17 | Jan 24 |
| December | 10 | Jan 17 * | | | |
| 2023 | | | | | |
| January | 07 | Feb 17 | January | 21 | Mar 03 |
| January | 14 | Feb 24 * | January | 28 | Mar 10 * |

* Only at Campbellfield & Dandenong South Transco Offices




WE ARE DOING BUSINESS AS USUAL

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 6152 8270 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU